பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 22 வியாழக்கிழமை 06.01.2022 கதிர் 62

### இது ரகசியம் அல்ல!

ஜே.ஆரின் காலத்தில் போரை முன்னின்று நடத்தியவர் லலித் அத்துலத் முதலி. பின்னர் பிரேமதாஸா ஜனாதிபதியானதும் ஆட்சித் தரப்பில் அவர் ஓரம் கட்டப்பட்டார். பிரேமதாஸா கொல்லப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் லலித் படுகொலை பக்கம்02

# தவறான பயணத்துக்கு ஆதரவு வழங்கோம்; தக்க தருணம் பார்த்து அதிரடி காட்டுவோம்!

## அரசுக்குச் சுதந்திரக் கட்சி கடும் எச்சரிக்கை

அரசு தவறான வழியில் பயணிக்குமானால் அதற்கான ஆதரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் வழங்காது. அரசுக்கு உரிய நேரத்தில் பதிலடி வழங்கவும் நாம் தயாராக இருக்கின்றோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு 10



# பிரதமர் மஹிந்தவை ஓரங்கட்டவே சுசிலின் பதவி திட்டமிட்டுப் பறிப்பு



## சம்பிக்க எம்.பி. சுட்டிக்காட்டு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியாக சுசில் பிரேமஜயந்த இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசில் பிரேமஜயந்தவின் கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பறிக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். 10

## பதவியில் இருப்பவர்களை நீக்குவது உசிதமானதல்ல

### அமைச்சர் விமல் கூறுகின்றார்



நாட்டின் தற்போதைய நிலைமையில் அமைச்சுப் பதவிகளில் இருப்பர்வர்களை நீக்குவது உசிதமான காரியமல்ல.

- இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடு தற்போது 10

## பாய்ந்து செல்வதற்கு முன்னர் சு.கவை உடன் வெளியேற்றுக!



### அரசிடம் திலும் அமுனுகம வலியுறுத்து

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். 10

## பட்டத் திருவிழா இடைநிறுத்தம்!

(இ.கலையமுதன்)

தைப்பொங்கல் நாளில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வருடா வருடம் தைப்பொங்கல் தினத்தன்று வல்வெட்டித்துறை உதயசூரியன் திடலில் நடத்தப்பட்டு வரும் 10

## ஆரியகுளம் மாநகர சபையுடையதா? ஆளுநர் ஜீவனுக்கு வந்தது சந்தேகம்!

### சமய உரிமைகள் போதகருமானார்

ஆரியகுளத்தின் மீது மாநகர சபைக்கு உரிமை இருக்குமாயின் அந்த உரிமையை உறுதிப்படுத்துங்கள் என யாழ் மாநகர ஆணையாளருக்கு வட மாகாண ஆளுநர் கடிதம் அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் பொதுமக்களின் சமய உரிமையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரம் மாநகர சபைக்குக் கிடையாது என்ற சாரப்பட - மாநகர சபையை அச்சுறுத்தும் பாணியில் - யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். 10



## பகிடிவதையில் ஈடுபட்ட மாணவனுக்கு யாழ். பல்கலைக்குள் நுழையத் தடை!

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் ஒருவர், புதுமுக மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் முடியும் வரை பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதிக்கும் உள்நுழைய முடியாதவாறு தடையுத்தரவு 10

## மணியும் குமாருக்கு அஞ்சலி



(இ.கலையமுதன்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் அணியும் நேற்று அஞ்சலி செலுத்தியுள்ளது.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 21ஆம் 10

## மாமனிதர் குமாரின் நினைவேந்தல்



(இ.கலையமுதன்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தலும் நினைவுப் பேருரையும் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுடர் ஏற்றப்பட்டு குமார் 10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டார். அந்தப் படுகொலைக்கான குற்றச்சாட்டு பிரேமதாஸா மீது வீழ்ந்தது. அதனால் மனம் நொந்து போன பிரேமதாஸா மனம் திறந்து ஒரு விடயத்தைச் சொன்னார்.

"என்னைக் கொல்வதானால் கொல்லுங்கள். ஆனால் என் Character (பண்பை, பாத்திரத்தை) அவமரியாதைப்படுத்தி கொல்லாதீர்கள்" – என்றார் மனவிசனத்துடன்.

ஒருவரை உடலியல் ரீதியாகத் தீங்கு விளைவிப்பதும் கொல்வதும் வன்முறைக் குற்றம். அதேபோன்றுதான் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் Character Assassination உம். (ஒருவரின் பண்பியலைப் படுகொலை செய்வதும்) ஒரு மனிதனின் சமூக வகிபாகத்தை வேண்டுமென்றே சீரழித்துக் குட்டிச் சுவராக்கும் வக்கிரம் தான் இந்தப் போக்கு. சமூக ஊடகங்களில் இது தாராளம்.

ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான நேரடி வன்முறை மாத்திரமல்லாமல் இவ்வாறு Character Assassination உம் ஒரு வகையில் வன்முறைதான். அத்தகைய அனுபவம் ஒன்று பற்றி வாசகர்களுடன் பகிர்வதன் மூலம் இத்தகைய வன்முறைக் குற்றம் இழைப்பவர்கள் குறித்து வாசகர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி செய்கிறேன்.

ஊடகவியலாளர்கள், பத்தி எழுத்தாளர்கள் என்ற முறையில் எங்கள் எழுத்துக்களில் தவறு, பிழைகள், தவறான தகவல்கள் மூலம் இன்னொருவருக்கு அபகீர்த்தி ஏற்படுத்துதல் போன்றவை இடம் பெற்றிருந்தால் நாம் அவற்றுக்குப் பொறுப்பு. அவற்றை விடய ரீதியாகச் சுட்டிக் காட்டினால் அவற்றைத் திருத்திப் பிரசுரிப்பது, தவறுக்கு மன்னிப்புக் கோருவது, பகிரங்கமாக அதனை ஒப்புக் கொள்வது நமது கடமை.

எம்மை – என்னை – பொறுத்தவரை அதற்கான வாசல்கள் திறந்தேயுள்ளன, அதற்கு நாம் எப்போதும் பின்நிற்கவேயில்லை என்ற குறிப்புடன் இனி விடயத்துக்குள் வருகிறேன்.

தற்போது தமிழர் தரப்புகளை ஒன்றிணைத்து பொது ஆவணம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சி ஒன்று நடைபெறுகின்றது. அது ஒரு முக்கிய அரசியல் விடயம். அது தொடர்பில் உள்வீட்டு விடயங்களையும் தகவல்களையும் முந்திக் கொண்டு என் பத்தியில் நான் தந்து வருகிறேன். வாசகர்களும் ஆவலோடு அவற்றைப் படித்தறிந்து வருகின்றார்கள்.

ஏதேனும் கட்சி அல்லது தரப்பு என் பத்தி எழுத்தில் தவறு, பிழையான தகவல் இருப்பதாகக் கருதினால் – அதை நேரடியாகச் சுட்டிக்காட்டினால் – அதைத் தெளிவுபடுத்த என்றும் பின் நின்றவனேயல்லன் நான்.

பல சமயங்களில் உண்மை சுடும். அதற்காக என் மீது கோபித்துப் பயன் இல்லை.

உண்மைகளை நான் அம்பலப்படுத்துவதானால், என் மீது கோபம் கொண்ட ஓர் அரசியல் தலைமை என்னை Character Assassination செய்யும் முயற்சியில் முழு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. அது வேதனையளிக்கின்றது.

பொது ஆவணம் தயாரிக்கும் முயற்சிக்கு ஆப்பு வைப்பதற்காக மலையகத் தலைவர்களான திகாம்பரம், இராதாகிருஷ்ணன் போன்றோரோடு நான் தொடர்பு கொண்டு பேசி, அவர்களைக் குழப்பி வருகின்றேன் என்ற பிரசாரத்தை அந்தத் தலைவர் முன்னெடுத்திருக்கின்றார்.

"நீங்கள் சிங்களவர்கள் மத்தியில் வாழ்கின்றீர்கள். உங்களுக்கு ஏன் இந்த சமஷ்டி விவகாரம்? எங்கள் ஆட்கள் சுயாட்சி கேட்டு, எங்கள் மக்களுக்கு வாங்கித் தந்த அழிவு போதா? நீங்களும் உங்கள் மக்களுக்கு அப்படி வாங்கிக் கொடுக்கப் போகின்றீர்களா?" – என்றெல்லாம் நான் தலைவர் திகாம்பரத்தைத் தொடர்பு கொண்டு பிரசாரம் செய்தேன் என்று சம்பந்தப்பட்ட தலைவர் பல இடங்களிலும் கூறித. திரிக்கின்றார்.

சம்பந்தன், செல்வம், சித்தார்த்தன் முதல் கொண்டு முக்கிய தூதரகம் ஒன்று வரை, மூத்த ஊடக நிர்வாகி வரை அவர் இப்படி எடுத்துரைத்திருக்கின்றார் என்பதை என்னால் உறுதி செய்ய முடிந்திருக்கின்றது.

இந்த விடயங்ககளை சம்பந்தன் ஐயாவுக்கு சித்தார்த்தன் தெரிவித்தார் என்றும் அறிந்தேன்.

ஆகவே என் ஊடக நண்பர்கள் மூலம் திகாம்பரத்திடமும் சித்தார்த்தனிடமும் இது குறித்துப் பேசி உண்மையைக் கண்டறியக் கேட்டுக் கொண்டேன்.

அப்படி நான் கேட்டுக் கொண்டதன் பேரில் திகாம்பரம் நேற்றுப் பகல் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

கடைசியாக – என் நினைவு சரி என்றால் – 2008 அல்லது 2009 ஆம் ஆண்டு நான் கொழும்பிலும் 'சுடர் ஒளி' ஆசிரியராகவும் இருந்த போது திகாம்பரத்தை என்னுடைய அலுவலகத்தில் நான் சந்தித்திருக்கிறேன். அதற்குப் பின் எங்களுக்கு இடையில் சந்திப்போ, தொடர்போ ஏதுமில்லை. இக்காலத்தில் நாங்கள் ஆளை ஆள் கண்டமை கூடக் கிடையாது. எனது பெயர் கூட அவருக்கு நினைவில் இருந்திருக்குமோ என்னவோ...?

பன்னிரண்டு வருடங்களுக்கு மேல் நான் நேரில் காணாத, தொலைபேசியில் தன்னும் பேசாத ஒருவரை நான் தொடர்பு கொண்டு தவறாக வழிநடத்தி, ஆவணத் தயாரிப்பைக் குழப்புகின்றேன் என்று அபாண்டக் குற்றச்சாட்டை பல இடங்களுக்கும் காவிச் சென்று சுமத்த இந்தத் தலைவருக்கு எங்கிருந்து தைரியம் வந்தது? எனக்குத் தெரியவில்லை. அவரது அரசியல் நேர்மை அவ்வளவுதான்.

மலையகத் தலைவர் இராதாகிருஷ்ணனையும் எனக்குத் தெரியும். அவருடன் தொலைபேசியிலோ, நேரிலோ நான் பேசி மூன்று வருடங்களுக்கு மேல் இருக்கும்.

அப்படி இருக்கையில் இந்த இருவருடனும் நான் தொடர்பு கொண்டு அவர்களை எப்படித் தவறாக வழி நடத்தியிருக்க முடியும்.?

நேற்றுப் பன்னிரண்டு வருடங்களின் பின் முதல் தடவையாக என்னுடன் தாமாகத் தொடர்பு கொண்டு பேசிய திகாம்பரம், "உங்கள் பெயரையே பத்துப் பன்னிரண்டு வருடங்களாக நான் உச்சரித்திருக்கவே மாட்டேன். அப்படி இருக்கையில் நீங்கள் என்னை வழிப்படுத்துகின்றீர்கள் என்று யாரும் கூறவும் இடமில்லை. கூறியிருக்கவும் கூடாது. அப்படி யாரும் கூறியிருந்தால் அது முழுத் தவறு." – என்றார்.

இந்தத் கதை சம்பந்தன் ஐயா வரைச் சென்றுள்ளது. நான் ஏன் இப்படியான காரியம் பண்ணுகின்றேன் என்று அவரே வேதனைப்பட்டார் என்றும் தகவல்.

என்னைப் பொறுத்தவரை ஊடகவியலாளரைப் பௌதீக ரீதியில் காயப்படுத்துவதை ஒத்த ஊடக அராஜகம் இது.

ஏனைய தமிழர் தரப்புத் தலைவர்களிடம் இப்படிப் பேசித் திரிபவர் யார் என்பது மற்றைய தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும்.

ஆகவே, அவர்கள் அறிய அந்தத் தலைவருக்கு நான் பகிரங்க சவால் விடுகின்றேன்.

01.இந்த ஆவணத் தயாரிப்புத் தொடர்பாக ஏதேனும் தலைவர்களோடு நான் தொடர்பு கொண்டு அவர்களைக் குழப்பும் வகையில் நான் நடந்து கொண்டேன் என்ற குற்றச்சாட்டை – பிற தலைவர்களிடம் அவர் கூறித் திரியும் அந்த அபாண்டத்தை – அவர் நிரூபிப்பார் எனின், என் பேனாவை நான் நிரந்தரமாக மூடி வைத்து விடுகிறேன். இல்லாவிட்டால், தான் கூறித் திரியும் தலைவர்களிடமே அவரே தன் கூற்றை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

02.என் பத்திச் செய்திகளில் தவறு இருந்தால் அதனைச் சுட்டிக் காட்ட அவருக்கு முழு உரிமையுண்டு. இதுவரை அப்படி ஏதும் அவர் செய்யவில்லை – முகப் புத்தகத்தில் என் பெயர் குறிப்பிடாமல் என்னை வைதமையைத் தவிர. இனி மேலும் பழைய தவறுகளை அவர் சுட்டிக்காட்ட முடியும். என் பத்தியில் தவறு இருந்தால் – அது நியாயாமான முறையில் சுட்டிக்காட்டப்படுமாக இருந்தால் – நிச்சயம் திருத்திக் கொள்ளப் பின்நிற்கவே மாட்டேன்.

03.நாங்களும் அவரும் சேர்ந்து மஹிந்த காலத்து ஊடக அராஜகங்களைக் கூட்டாகக் கண்டித்தோம். எதிர்த்தோம். போராடினோம். ஆனால் இப்போது பிற வழிகளில் ஊடகங்களுக்குத் தவறான அழுத்தம் கொடுப்பது கூட ஊடகத்துக்கு எதிரான அராஜகம்தான் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே சுட்டிக் காட்டும் நிலைமை வந்திருப்பதை அவருக்கும் சேர்த்து நினைவூட்ட விரும்புகிறேன்.

என் பத்தியின் தகவல்களால் தனது அரசியல் இருப்புக்கு நெருக்கடி என்று கருதி, அவர் இப்படித் தவறாக Character Assassination செய்வது போல நடப்பதும் ஊடகத்துக்கு எதிரான அராஜகம் தான்.

4. அவரது Character ஐ நாசமாக்க ஊடகங்களுக்கு பல விடயங்கள் உண்டு. ஆனால் நம் ஊடகங்கள் அத்தகைய hit below the belt ஈனத்தனத்துக்குப் போகாது என்பது தெரிந்துதான் அவர் இப்படி நடந்து கொள்கிறார் போலும்.

திருந்துவதும் திருந்தாததும் அவரைப் பொறுத்தது. ஆனால் நான் தொடர்ந்து உண்மைகளை அம்பலப்படுத்துவேன். அதற்குப் பின் நிற்க மாட்டேன். யுத்த காலத்தில் என் எழுத்துப் பங்கு, பணியும் என் போக்கும் அவருக்கும் தெரியும். எனவே இந்த சலசலப்புக்கு நான் அஞ்சேன். உண்மைகள் இருக்குமானால் – எனக்கு அவை தெரிய வருமானால் – தொடர்ந்து அம்பலப்படுத்துவேன்.

நான் சொல்லாதவற்றை – செய்யாதவற்றை – தன் அரசியல் சுயநலனுக்காக, திரித்து என் பெயரில் பிரசாரம் செய்து வரும் அவரை உரிய சமயத்தில், உரிய விதத்தில் சந்திப்பேன். பார்ப்போம்.

– மின்னல் –

# நீதிபதி இளஞ்செழியனுக்கு வவுனியா மன்றில் வரவேற்பு



வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுப் புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அவருக்கு வவுனியா நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் அமோக வரவேற்பளித்தனர்.

நீதிச் சேவையை வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்த மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சேவையில் 25 வருடங்களை எட்டியுள்ள நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக மீள வந்துள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற பதிவாளர் மீரா வடிவேற்கரசன் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

# வவுனியா விபத்தில் பெண் படுகாயம்!

(வவுனியா நிருபர்)

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, குருமன்காடு-திருநாவற்குளம் பிரதான வீதியில் மோட்டர் சைக்கிள் ஒன்றில் பெண் ஒருவர் சென்று கொண்டிருந்தபோது, ரயில் பாதை ஊடாக ரயில் சென்றுள்ளது. இதன்போது ரயில் பாதைப் பகுதியை அண்மித்து மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த மாடுகள் ரயில் சத்தம் காரணமாக சிதறி ஓடியபோது வீதியால் சென்ற குறித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

Walk-In Interview
Front Office Executive



We are looking for a female Front Office Executive for immediate employment

The ideal candidate must have;
# Poses G.C.E. (A/L) qualification.
# An IT Literate.
# Strong interpersonal and communication skills.
# Excellent English communication skills.
# Excellent telephone etiquettes and knowledge.
# Hands-on experience in Front-Desk operations.
# Certificate/Diploma in Business Administration or similar field will be an added advantage.

Sunday, 09/01/2022
10:00 - 13:00

IIS CITY CAMPUS
441 Clock Tower Road, Jaffna
0212228060 / 0717774666

# 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைத்தும் நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது!

## ஜே.வி.பி. சாடல்

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப் பெறாது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் மத்திய செயற்குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சமந்த வித்தியாரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 70 வீதத்தால் பொருளகளின் விலைகளை உயர்த்தி, 2 வீதமான மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காது எனத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவு இன்று அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக பொய்யான வேலைகளை செய்யாது, உண்மையில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பொதுவாகப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பணவீக்கம் 25 வீதமாக உயர்வடைந்துள்ளது என்பதை அரசாங்கம் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

# சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றுக்காக 315 கிலோ மீற்றர் தூரம் பயணித்த நபர்!

ஹிக்கடுவை வர்த்தகர் ஒருவர் சமையல் எரிவாயு சிலிண்டரை தேடி 315 கிலோமீற்றர் தூரம் பயணித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சிறிய வர்த்தகம் மேற்கொள்ளும் ஒருவர் தனது நாளாந்த நடவடிக்கைக்கு அவசியமான சிலிண்டரை தேடி 315 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளார்.

குறித்தவர்த்தகர்சிலிண்டர்தேடிபொலன்னறுவை பிரதேசத்திற்கு சென்றுள்ளார் என தெரியவந்துள்ளது. அவர் மிகச் சிறிய 3 சிலிண்டர்களுடன் தனது பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

பெரிய சிலிண்டருக்கு ஈடாக 12 கிலோ எடையுள்ள இரண்டு சிலிண்டர்களையும், 5 கிலோ எடையுள்ள காலி சிலிண்டரையும் விற்பனையாளரிடம் கொடுப்பதற்காக எடுத்துச் சென்றுள்ளார்.

315 கிலோ மீற்றர் பயணத்தின் இறுதியில் 37 கிலோ கிராம் அளவிலான சிலிண்டரை பெற்றுக் கொண்டவர் ஓட்டோவில் மீண்டும் ஹிக்கடுவை நோக்கி சென்றுள்ளார்.

இவர் மிகப்பெரிய விடயத்தை சாதித்த மகிழ்ச்சியுடன் அவர் அங்கிருந்து சென்றுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.



# மாத்தளையில் பச்சைமிளகாய் வரலாறு காணாத விலையில்!

*மாத்தளையில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 1,600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இவ்வாறு விலைவாசி உயர்வால் கடும் அவதிக்குள்ளாகியுள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.*

*பல நுகர்வோர் தற்போது 50 கிராம் பச்சை மிளகாயை மாத்திரமே வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.*

*எனினும் தற்போது வரையில் சந்தையில் கிடைக்கும் பச்சை மிளகாய் பாரிய அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாகவே ஒரு கிலோ பச்சை மிளகாய் இந்த அளவிற்கு விலை அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*கடந்த வாரம் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பச்சைமிளகாய் தற்போது 1,600 ரூபா வரை அதிகரித்துள்ளது. அடுத்து வாரங்களில் இது பல மடங்கு அதிகரிக்கலாம் என நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.*

# ராஜிதவுக்கும் கொவிட் உறுதி!



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவிற்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின்போது கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அவர் வீட்டிலேயே தன்னை சுயதனிமைப்படுத்திக்கொண்டுள்ளார். அத்தோடு, மருத்துவ கண்காணிப்பின் கீழ் அவருக்குத் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கடந்த சில நாள்களாக அவருடன் தொடர்பைப் பேணியவர்களும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு விவசாயிகள் நெல் அறுவடையை முற்கூட்டியே திட்டமிடுவது உகந்தது!

அடுத்தவாரம் மழையை எதிர்பார்க்க முடியும் என்பதால்விவசாயிகள்நெல்அறுவடையைமுன்கூட்டியே திட்டமிடுவது உகந்தது என யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில் -

வடமாகாணத்தில் தற்போது பனி பொழிவு அதிகரித்துள்ளது. எனினும் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிவரை வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் மிதமானது தொடக்கம் கனமானது வரை மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

தற்போதைக்கு வடமாகாணத்தின் உள்நில பகுதிகளில் குறிப்பாக ஏ - 9 வீதியை அண்மித்த பகுதிகளில் இரவு வெப்பநிலை 17 செல்சியஸ்வரை குறைவடையகூடிய சாத்தியகூறுகள் உள்ளன எனத் தெரிவித்தார்.

## குடியிருக்க வீடு இல்லை எனக் கூறி

# வீட்டு பொருள்களுடன் கிராம அலுவலர் அலுவலகத்தில் வந்து தங்கிய பெண்!

## வவுனியாவில் பெரும் பரபரப்பு





வவுனியாவில் குடியிருப்பதற்கு வீடு இல்லை எனத் தெரிவித்து வவுனியா தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்தில் வீட்டுப் பொருள்களுடன் வந்து பெண் ஒருவர் தங்கியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, தோணிக்கல், ஆலடிப் பகுதியில் பிறிதொரு நபரின் வீட்டில் வசித்து வந்த பெண் ஒருவரை வீட்டு திருத்த வேலை காரணமாக குறித்த வீட்டு உரிமையாளர் வெளியேற்றியுள்ளார்.

இதனையடுத்து வாகனம் ஒன்றில் தனது வீட்டில் இருந்த பொருள்களை ஏற்றிய குறித்த பெண் வவுனியா, தோணிக்கல் கிராம அலுவலர் அலுவலகத்தில் உள்ள அறை ஒன்றில் தனது பொருள்களை இறக்கி வைத்து விட்டு அங்கு தங்கியுள்ளார். இந்த விடயம் தொடர்பில் அறிந்து கொண்ட பதில் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பெண்ணிடம் தகவல்களைப் பெற்று அவரின் நிலை தொடர்பில் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் ஆகியோருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பிரதேச செயலகத்தின் மகளிர் உத்தியோகத்தர்கள் பெண்ணின் நிலமைகளை தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன், பொலிஸாரிடமும் தெரியப்படுத்தியிருந்தனர். குறித்த பெண் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிய வந்தையடுத்து மருத்துவ ஆலோசனையும் பெறப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த வவுனியா பொலிஸார், மகளிர் பொலிஸாரின் உதவியுடன் பெண்ணை இரவு 10 மணியளவில் அழைத்துச் சென்று வாக்குமூலம் பெற்ற பின் மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அவருடைய பொருள்கள் கிராம அலுவலர் அலுவலகத்தில் உள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன. சிகிச்சையின் பின் பெண் தங்குவதற்கான ஓர் இடம் வழங்குவது தொடர்பாகப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். (100)

# 17 வயதுச் சிறுவனின் கொலை சம்பவம்: 16,17 வயதுக்குட்பட்ட 6 சிறுவர் கைது!

டிக்டொக் காணொளி தொடர்பாக ஏற்பட்ட தகராறில் கிராண்ட்பாஸ், மாதம்பிட்டிய பகுதியில் 17 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபர்கள் 16 முதல் 17 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டிக்டொக் காணொளி தொடர்பாக ஏற்பட்ட தகராறில் இளைஞரொருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

கொழும்பு - கிராண்ட்பாஸ், மாதம்பிட்டிய லேன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

டிக்டொக் காணொளியால் ஏற்பட்ட தகராறையடுத்து, குறித்த சிறுவன் மேலும் இருவருடன் வீதியில் சென்று கொண்டிருந்தபோது மற்றொரு குழு அவரை தாக்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இதன்போதே, சந்தேகநபர்கள் அவரை கத்தியால்குத்திவிட்டுஅங்கிருந்துதப்பிச்சென்றுள்ளனர் எனவும் அதன்பின்னர், படுகாயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொருளாதாரத்தை முடக்கும் வேலை

**பொருளாதார நெருக்கடியில் மோசமாக சிக்கியிருக்கும் நாட்டை எப்படி அரசு மீட்டெடுக்கப் போகின்றது என்று எல்லோரும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கையில் கடந்த திங்களன்று, இவ்வாண்டுக்கான அமைச்சரவையின் முதல் கூட்டம் நடைபெற்றது.**

**அதில், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான சிக்கலான நடைமுறைகளை அரசுத் தலைமை ஆராயும், அந்தக் கூட்டத்தின் முடிவில் மேலும் சில இக்கட்டான தீர்மானங்கள் வெளியாகும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. இப்பத்தியிலேயே கூட அப்படி எதிர்வு கூறியிருந்தோம்.**

**ஆனால், அவை எல்லாவற்றுக்கும் மாறாக, வலுவான பொருளாதார ஸ்திரத்தைக் கொண்ட நாடு ஒன்று தனது மக்களுக்கு புத்தாண்டுப் பரிசுகளை அறிவிப்பது போல இலங்கை மக்களுக்கான அரசின் சகாயங்களை அந்தக் கூட்டத்தின் முடிவில் அறிவித்தார் இலங்கை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.**

**அரச ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கு மேலதிகமாக மாதாந்தம் ஐயாயிரம் ரூபா அலவன்ஸ், சமுர்த்திக் கொடுப்பனவு ஆயிரம் ரூபா உயர்வு, அத்தியாவசியப் பொருள் மற்றும் மருத்துவ பொருள்கள் மீதான வரிகள் முற்றாக விலக்கல், போக்குவரத்துச் சபைக்கு புதிதாக ஐந்நூறு பஸ்கள், பொலிஸாருக்கு புதிதாக எழுநூற்றியைம்பது ஜீப்கள் என்று புத்தாண்டு பரிசு மழை எல்லோரையும் அசர வைத்தது.**

**சரி, இதற்கான நிதி எங்கேயிருந்து கிட்டப் போகின்றது? ஏற்கனவே நாட்டின் பொருளாதாரம் முடங்கிக் கிடக்கின்றது. அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குக் கூட அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை. போதாக்குறைக்கு சர்வதேச தரப்புகளிடம் பெற்றுக் கொண்ட கடன்களுக்கான தவணைக் கட்டணமாக சுமார் ஐம்பது கோடி டொலர் (சுமார் பதினோராயிரம் கோடி ரூபா) ஜனவரியில் செலுத்த வேண்டிய கடப்பாடு நாட்டுக்கு ஏற்பட்டுள்ள வேளை இது.**

**இந்தச் சமயத்தில் சுமார் 23 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான சகாயங்கள், உதவிகளை பொதுமக்களுக்குப் புதிதாக வழங்குவதற்கான புத்தாண்டு அறிவிப்பை நிதி அமைச்சர் வெளியிட்டிருக்கின்றார்.**

**இந்த இக்கட்டுகள், நெருக்கடிகள், பின்னடைவுகளுக்கு மத்தியில் இந்தத் தாராளத்துக்கான நிதி எங்கிருந்து அரசுக்குக் கிட்டப் போகின்றது?**

**அது பற்றிய விடயத்தைப் போட்டுடைத்திருக்கின்றார் ஜே.வி.பியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹரிணி அமரதுசூரிய அம்மையார்.**

**இன்னொரு நாட்டிடம் மேலும் கடன் வாங்கியோ அல்லது புதிதாக பண நோட்டுக்களை அச்சிட்டோ அதன் மூலம் இப்படி வாரி வழங்கப் போகின்றது அரசு. ஆனால், இதன் விளைவு என்ன? இப்படி அரசு வாரி வழங்கும் தாராளத்தின் பொறுப்பையும் – கடனையும் – கடைசியில் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் மக்கள்தான் சுமக்கப் போகின்றார்கள் என்று விளக்குகின்றார் அவர்.**

**“இந்த நடவடிக்கை மூலம், இப்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் குறித்து தாம் ஏதோ சிரத்தையாக உள்ளனர் என்று காட்ட – நடிக்க – ஆளும் தரப்பினர் முயற்சிக்கின்றனர். வெளிநாட்டில் புதிது, புதிதாகக் கடன் வாங்கியோ, ரூபா நோட்டுகளைக் கண்மூடித்தனமாக அச்சிட்டோ இந்தத் தாராளத்துக்கான நிதியை அரசு தேடிக் கொள்ள முயற்சிக்கும். அவற்றின் பொறுப்பும், கடப்பாடும் கூட கடைசியில் அந்த மக்களின் மீதுதான் வந்து விழப்போகின்றது” – என்று விசனம் தெரிவித்திருக்கின்றார் அவர்.**

**அரசின் இத்தகைய குறுகியகால நிவாரணமளிக்கும் குயுக்தித்தனமான நடவடிக்கை, நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்காது. மறுபுறமாக, மேலும் மேலும் பொருளாதார இக்கட்டுக்குள் நாட்டை ஆழ்த்தும். அது தான் நடக்கப்போகின்றது.**

# 690 கோடி அமெரிக்க டொலர்களை இந்த ஆண்டு கடனாக செலுத்தவேண்டும்

## நிதி அமைச்சர் பஸில் தகவல்



இலங்கை இந்த ஆண்டில் 690 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக செலுத்த வேண்டியுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சிங்கள வார இதழொன்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு அரசாங்கத்தால் குறித்த கடனை உரிய முறையில் திருப்பி செலுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செலுத்தப்பட வேண்டிய கடன் தவணைகள் இதுவரையில் எவ்வித பிரச்சினையும் இன்றி செலுத்தப்பட்டுள்ளன எனவும் எதிர்காலத்திலும் இவ்வாறே செயற்படுவதாகவும் நிதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடன் செலுத்தப்படும் அதேவேளை, மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் உரிய முறையில் மேற்கொள்ளப்படுமெனவும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் கிளிநொச்சி மகாவித்தியாலய சமூகம் கோரிக்கை!



பாடசாலை ஆரம்பிக்கும், முடிவுறும் நேரங்களில் ஏற்படும் நெரிசலைக் கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என கிளிநொச்சி மகாவித்தியாலய சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குறித்த பாடசாலை வடக்கு மாகாணத்தில் அதிக மாணவர் தொகை கொண்ட பாடசாலையாக உள்ளது. 2 ஆயிரத்து 500 மாணவர்கள் வரை கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் உயர்தரம் வரையான மாணவர்கள் கல்வி கற்பதுடன், நீண்ட வரலாறு கொண்ட பாடசாலையாகவும், சாதனைகள் பல புரிந்த பாடசாலையாகவும் இன்றும் திகழ்கின்றது.

இந்தப் பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவுறும் நேரங்களில் பாரிய போக்குவரத்து நெருக்கமான நிலை காணப்படுகின்றது. ஏ - 9 வீதியிருந்து 25 மீற்றர் உட்பகுதியில் காணப்படும் குறித்த பாடசாலை, வட்டக்கச்சி செல்லும் பிரதான பாதையில் அமைந்துள்ளது.

அந்த வீதி தற்பொழுது புனரமைப்பு செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் அகலம் சுமார் 3 மீற்றர் மாத்திரமே உள்ளது. இதேவேளை சில அரச திணைக்களங்களும் இந்த வீதியில் அமைந்தும் உள்ளது.

இவ்வாறான நிலையில் பாரிய நெரிசல் குறித்த பகுதியில் ஏற்பட்டுள்ள நிலையில், குறித்த நெரிசலை கட்டுப்படுத்தி மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பெற்றோரும், பாடசாலை சமூகத்தினருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியை குறிப்பிட்ட நேரங்களில் ஒருவழி பாதையாக்குதல், அக்காலப்பகுதியில் கனரக வாகனங்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல், வீதியை மேலும் விஸ்தரித்தல், மாணவர் நடைபாதையை அமைத்தல், வாகனங்களைப் பாதையிலிருந்து விலகி உரிய முறையில் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் போன்றவற்றால் அந்த நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும்.

பல்வேறு துறைசார்ந்தவர்களின் பிள்ளைகளும் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று வரும் நிலையில் இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என கல்வியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலை சமூகம் விநியமான கோரிக்கையை முன்வைத்துள்ளது.

# யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையிலீடுபடும் பஸ்கள் மீது தாக்குதல்




## ஒருவர் கைது

யாழ்ப்பாணம் - கொழும்புக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் மீது தாக்குதலை மேற்கொண்டு, சாரதி மற்றும் நடந்துநர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி சந்திக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வேளை குறித்த பஸ்ஸை இடைமறித்த கும்பல் ஒன்று பஸ்ஸின் மீது தாக்குதலை மேற்கொண்டதுடன், சாரதி மற்றும் நடத்துநர் மீதும் தாக்குதல் மேற்கொண்டது.

அதில் சாரதி மற்றும் நடத்துநர் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நெல்லியடி பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், ஏனைய நபர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை , பருத்தித்துறை - திருகோணமலைக்கு இடையில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸின் மீது , நெல்லியடி புறாப்பொறுக்கி சந்தி பகுதியில் வைத்து இனம் தெரியாத கும்பல் கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் சாரதியால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழினத்திற்கு எதிராக வாங்கிக் குவித்த கடனே இலங்கையை சர்வதேசத்திடம் அடகு வைக்கவும் கையேந்தவும் வைத்துள்ளது

## கொழும்பின் முகத் திரையைக் கிழிக்கிறார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



சிங்கள -பௌத்த மேலாதிக்கவாதத்தின் மூலம் ஆட்சியைத் கைபற்றி தக்க வைத்துக் கொள்ளவதற்காக இலங்கையின் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாகவே இன்று மக்களின் ஆணையை மீறி சர்வதேசத்திடம் அடகு வைப்பதற்கும் பிச்சையெடுப்பதற்கும் இலங்கையைத் தள்ளியுள்ளது என்று இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைகுறித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் கருத்து தெரிவித்துள்ளார்.

நாட்டின் இன்றைய பொருளாதார நிலைகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் மிகமோசமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பதை நாட்டு மக்களும் சர்வதேச சமூகத்தினரும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆளுந்தரப்பு அமைச்சர்களே மக்களை அச்சுறுத்தும் வகையிலும், எச்சரிக்கும் வகையிலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்துப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். எதிரணியிலிருக்கக் கூடியவர்கள் அனைவரும் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்குப் போகுமாறு வலியுறுத்துகின்றார்கள். ஆனால் அரசாங்கம் பொருளாதார வீழ்ச்சிக்கு கொவிட்19 நோய்த்தொற்றுதான் காரணம் என்று ஒரே மந்திரத்தையே உச்சாடனம் செய்கிறது.

ஆனால் உண்மையான காரணம் அதுமாத்திரம்தானா? இந்த நாட்டில் கடந்த முப்பது ஆண்டுகால அழிவு யுத்தத்திற்கு இவர்கள் செலவிட்ட ஆயிரக்கணக்கான பில்லியன் டொலர்கள், பொருளாதார வளர்ச்சிக்காகப் பாவிக்கப்பட்டிருந்தால் இந்த நாடு சொர்க்கபுரியாக மாறியிருக்கும். இதற்கு மாறாக, பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைக்கு இனவாதமும் மேலாதிக்க சிந்தனையும் காரணமாக அழிவு யுத்தத்தையே அரசாங்கம் தீர்வாகக் கொண்டிருந்தது.

இலங்கை அரசு தமிழ் மக்கள் மேல் கட்டவிழித்துவிட்ட யுத்தத்தால் அவர்கள் (தமிழ் மக்கள்) சாதாரணமாகப் பாதிக்கப்படவில்லை. பல பத்தாண்டுகளாக அவர்கள் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையின் கீழ் வாழ்ந்துவந்தார்கள். இதன் உச்சகட்டமாக இறுதி யுத்த காலப் பகுதியில் தாலிக்கொடியை விற்று பால்மா வாங்கியதும், பொது இடங்களில் கஞ்சித்தொட்டியை வைத்து மக்களுக்குக் கஞ்சி ஊற்றியதும், சிறிய சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்த வேண்டிய காயங்களை மருந்தின்றியும், உரிய வைத்தியசாலைகளின்றியும் அங்கங்களை அறுத் தெறிந்ததும் நாங்கள் அனுபவித்தவை சொல்லொணா துன்பங்கள்.

இன்று அதே நிலை ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் வந்துவிடுமோ என்று நாம் கவலையடைகின்றோம்.

இலங்கையின் சமகால பொருளாதார வீழ்ச்சியென்பது வெறும் கொவிட் 19 இனால் மட்டும் ஏற்பட்டது அல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து உள்நாட்டில் ஆதிக்க சக்திகள் ஏற்படுத்திக் கொண்ட இனவாதங்களும் ஒடுக்கு முறைகளும் சமச்சீரற்ற பொருளாதார முன்னெடுப்புகளும் இதை வறிய நாடு என்ற பட்டியலுக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தது.

யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னரும் இன்று வரையில் பாதுகாப்பு செலவீனம் என்பது யுத்தகாலத்திலும் பார்க்க அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதைப்பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பியபோது யுத்தத்திற்காக வாங்கிய கடன்களை அடைக்க வேண்டியிருக்கிறது என்றும், அதற்காகவே பாதுகாப்புச் செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. யுத்தம் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் யுத்தத்திற்காக வாங்கிய கடன்கள் அடைக்கப் பட்டுவிட்டனவா என்ற கேள்வியும் எழுகின்றது. இலங்கை போன்ற சிறிய நாட்டில், ஏறத்தாழ மூன்று இலட்சம் இராணுவமும், இதனைவிடவும் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் ஆளணியும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஆளும் தரப்போ, எதிர் தரப்போ இத்தகைய செலவினங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று எப்பொழுதாவது பேசியிருக்கின்றார்களா?

உலகநாடுகள் அனைத்திலும் கடன் பெறுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. கடன் வாங்கி, வாங்கிய கடனை கட்டுவதும், வாங்கிய கடனுக்கு வட்டி கட்டிவதற்காகக் கடன் வாங்குவதுமாகத்தான் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதா, வேண்டாமா என்ற பட்டிமன்றமும் நடைபெற்றுவருகின்றது.

இப்பொழுது பங்களாதேஷ், இந்தியா, சீனா தொடக்கம் உலக நாடுகள் முழுவதிலும் பிச்சைப் பாத்திரம் ஏந்தி அலைகிறார்கள். புத்த பகவான் பிக்குகள் பிச்சைப் பாத்திரம் ஏந்தியே மக்களிடமிருந்து உணவைப் பெறவேண்டும் என்று போதித்துள்ளார். இன்று பௌத்த மேலாதிக்கத்தில் திளைத்திருக்கும் இலங்கை அரசாங்கம் ஒட்டு மொத்த மக்களையும் பிச்சைப்பாத்திரம் ஏந்த வைத்துள்ளது.

இன்று எல்லா வகையிலும் தோல்வியுற்ற ஓர் அரசாங்கமாக மாத்திரமல்லாமல், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான எத்தகைய வழியுமின்றி தவிக்கும் வீழ்ச்சியடைந்த ஓர் அரசாங்கமாகவும் இன்றைய அரசாங்கம் மாறியிருக்கிறது.

கடந்த ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் உங்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் ஆட்சியை எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் நாட்டை பொருளாதார ரீதியில் வளப்படுத்துகிறோம் என்று சவால் விடடிருந்தார்கள். இன்று அவர்களே மக்கள் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்ந்துள்ளனர். இவர்களால் நாட்டை சோமாலியாவைவிட மோசமான நிலைக்குத் தள்ளியதைத் தவிர வேறு எதைச் சாதிக்க முடிந்தது? இந்த நாட்டை வளப்படுத்த வேண்டும், பொருளாதார ரீதியாக முன்னேற்ற வேண்டும் என்று கருதினால் பல்வேறுபட்ட மாற்றங்களைச் செய்வதற்கு இலங்கை அரசும், எதிர்ணியினரும் தயாராக இருக்க வேண்டும்.

முதலாவதாக, இது சிங்கள பௌத்த நாடு என்ற மேலாதிக்க சிந்தனையை விடுத்து, அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான அடிப்படைகளை உருவாக்க வேண்டும்.

இரண்டாவதாக இனங்களிடையேயும், மதங்களிடையேயும், உழைக்கும் வர்க்கத்தினரிடையேயும் மோதல்களை உருவாக்கி அவற்றினூடாக வாக்குகளைக் கபளீகரம் செய்யும் நிலைவரங்களைக் கைவிட வேண்டும். இந்த நாட்டில் இருக்கக்கூடிய தேசிய இனங்கள் தங்கள் அபிவிருத்திகளைத் தாமே செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கான அதிகாரங்களை வழங்க வேண்டும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தடையாக இருக்கக்கூடிய முப்படைகளின் அதிகரிப்பை நிறுத்துவதுடன் அவற்றை இயன்றவரை எவ்வாறு குறைக்கலாம் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைகளை நாட்டு நலனுக்கேற்பவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவகையிலும் உருவாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர, தரகுப் பணம் வருகிறதே என்பதற்காக நாட்டை வல்லரசுகளிடம் விற்றுவிடக்கூடாது.

ஆகவே இலங்கையின் பொருளாதாரத்தைத் திட்டமிடுபவர்கள் யாராக இருந்தாலும், மேற்கண்ட விடயங்கள் அனைத்தும் கவனத்தில் எடுக்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்படாவிட்டால், உலக நாடுகளிடம் பிச்சை எடுப்பதென்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆட்சி மாறவேண்டும், பொருளாதாரம் வளம்பெற வேண்டும் என்பதிலும் நாங்கள் ஒருமித்த கருத்துள்ளவர்களாகவே இருக்கின்றோம். வரப்போகின்றவர்கள் எவ்வாறு இதனை மாற்றியமைக்கப் போகின்றார்கள் என்பதுதான் கேள்வி. வெறுமனே ஆட்சி மாற்றம் மட்டும் பிரச்சினைக்குத் தீர்வாகாது.

இந்த நாட்டு மக்கள் பசி, பட்டினி, பஞ்சம் ஆகியவற்றிலிருந்து காப்பாற்றப் படவேண்டும். அதற்கு இன, மத, மொழி வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சகல தொழிற் சங்கங்களும் ஒன்றிணைய வேண்டும்.

நாட்டில் இன்று எரிவாயு தட்டுப்பாடு, எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு, அடுத்து வரும் வாரங்களில் எரிபொருள் இறக்குமதி பாதிக்கப்படக்கூடிய சூழல், அதனால் ஏற்படக்கூடிய மின்சார விநியோகத் தடை, தற்போது சமையல் எரிவாயுவிற்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் மண்ணெண்ணெய்க்கும் வரப்போகும் தட்டுப்பாடு போன்றவற்றால் அரச ஊழியர்களும் தனியார்துறை ஊழியர்களும் உரிய நேரத்திற்குப் பணிக்கு வரமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படப்போகின்றது. இந்த அபாயங்களைப் புரிந்துகொண்டு சகல அரசியல் கட்சிகளும் செயற்படவேண்டும். -என்றார்.

# வங்கிக் கணக்குகளின் அந்நிய செலாவணி வேறு பிரிவுகளுக்கு மாற்றப்படுகின்றனவா?

## மறுக்கிறார் கப்ரால்



இலங்கை வங்கிகளில் வாடிக்கையாளர்களின் கணக்குகளில் உள்ள அந்நிய செலாவணியை வேறு பிரிவுகளுக்கு மாற்றுமாறு இலங்கை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் வெளியாகி வருகின்றன என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அவரது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்தில் நேற்று (புதன்கிழமை) தெரிவித்துள்ளார்.

இலங்கை வர்த்தக வங்கிகளில் உள்ள வெளிநாட்டு நாணய வைப்பாளர்களின் கணக்குகளில் உள்ள வைப்புத்தொகைகளில் 25 வீதம் உள்ளூர் நாணயங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இதை நாம் நினைவில் நிறுத்திக் கொண்டு தமிழர்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழர்களுக்கு நிரந்தரமாகத் தீர்வு சுயாட்சி இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. நாடாளுமன்ற சட்டவாக்கம் செய்யப்பட்ட அரசியல் யாப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் தற்சமயம் பலவீனம் அடைந்துள்ள காலத்தில் தற்காலிகமாக வேண்டும். அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த கூடிய செயல் வடிவத்தைத் தமிழரசுக் கட்சி வழங்க வேண்டும். என்பதை நான் பகிரங்க வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# கொவிட் தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்கல் தொழில் நுட்ப நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## சுகாதார அமைச்சு



கொரோனாத் தடுப்பூசி அட்டையைப் பொது இடங்களில் கட்டாயமாக்குவதற்கான தொழில் நுட்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதற்கமைய, கியு.ஆர். குறியீடு மற்றும் விண்ணப்பத்தை வழங்குவதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைக் கட்டாயமாக்க முடியாத நிலையில், பொது இடங்களுக்குப் பிரவேசிக்கும்போது தடுப்பூசி அட்டையைக் கட்டாயமாக்க முடியும் எனவும் அதற்கான ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 243

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**622. தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமைப்பாடாக இந்திய பிரதமருக்கு அனுப்பவுதென்று தயாரிக்கப்பட்ட நகல் சமர்ப்பணம் அனுமார் வால் மாதிரி நீண்டு கொண்டே போகிறதே? இப்பொழுது ரெலோ பகுதி, யார் கையெழுத்திடாவிட்டாலும் தாங்கள் அதனை கொடுப்போம் என்கிறார்களே? ஒருமைப்பாடாக நடக்குமா?**

இதில் ஒவ்வொரு கட்சிக்கும் உள் நோக்கங்கள் உண்டு. அவை தேர்தலை ஒட்டியவை. எந்தக் கட்சி பலவீனப்படுகிறது, எதனை பலவீனப்படுத்தலாம் என்ற ஆசைகள். அவற்றை மீறி பல கருத்தாடல்கள் கூட்டமைப்பிலேயே.

இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தையோ 13ஆம் திருத்தத்தையோ ஏற்காது, அது மட்டுமல்ல, இந்தியாவின் ஈடுபாட்டையே விரும்பாது, பிரபாகரனின் பாதையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்க அது நடக்கவில்லை என்ற எண்ணம் கொண்டவர்கள் ஒருபுறம்.

இன்னுமொரு பகுதி 13ஆம் திருத்தத்தை ஓர் தொடக்கப் புள்ளியாக எடுத்து அதிலிருந்து முன்னேற வேண்டும், ஆனால், அதுதான் தீர்வல்ல என எண்ணுபவர்கள். மற்றவர்கள் 13ஆம் திருத்தம்தான் தற்போது தமிழ் மக்களுக்குக் கையிலிருப்பது, அதையாவது இந்தியாவின் அனுசரணையில் தக்க வைத்து கொள்ள வேண்டும் என நினைப்பவர்கள்.



**623. இவர்களுக்குள் சம்பந்தன் என்ன நோக்கத்தில் இருக்கிறார்?**

'ஒற்றுமையின்மையெனும் சாபத்தீடு தமிழினத்தை விட்டு எப்போது ஒழியும்?' என்ற தலைப்பில் 2017 காலப்பகுதியில் ஈழ சுதந்திரனில் ஆசிரியவுரை வந்திருந்தது. அதற்கு கருத்துக் கடிதம் எழுதிய ஒரு வாசகர், தமிழினத்திற்கெல்லாம் அச்சாபத்தீடு பொதுவானது என்றாலும், ஈழத்தமிழர்களுக்கே அதிகம் பொருந்துவதாகும், இல்லையென்றால் தமிழரசு கட்சி மூலம் தடம் பதித்து தந்தை செல்வாவின் புகழொளியில் வெளிச்சம் பெற்று, அதனாலேயே ஆயுதப்போராளிகளாலும் ஆதரிக்கப்பட்டு, இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் அதன் காரணமாக நாடாளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவராகவும் உள்ள இரா.சம்பந்தர் 'நான் தமிழரசு கட்சி மூலம் அரசியல்வாதியாக வில்லை' என்று சொல்லியிருப்பாரா?

ஏனெனில் தமிழரசுக் கட்சி, தந்தை செல்வாவின் தாக்கமில்லாத தமிழ்த் தேசியம் என்பது இலங்கையில் இருக்கவே முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார் அந்த வாசகர்.

பிரபாகரன் ஐ.நாவின் மத்தியில் விட்டுப்போன தமிழ் தேசியத்தை அந்த இலட்சியத்தில் அங்கிருந்தும் சம்பந்தன் அதனை முன்னேற்ற போவதில்லை, அது தோற்றுப் போனது என்பது அவரது கூற்று

ஆகவே, அனுமாரின் வாலில் மற்றையோர் தீப்பந்தத்தை சுற்றி எண்ணையூற்றி பற்ற வைத்து விட்டாலும், அது தன்னையும் சுடும் என்று சம்பந்தன் இலங்கைக்குத் தீ வைக்காது, இராமனிடம் சீதை இங்குதான் இருக்கிறார், நீ வந்து மீட்டுக்கொண்டுபோ என்றுதான் சொல்லுவார். இந்திய ஒப்பந்தமும் 13ஆம் திருத்தமும் இந்தியா ஆக்கியவை, அவற்றை அமுல்படுத்துவது அவர்களைப் பொறுத்தது என்பது தொடக்கத்திலிருந்தே அவரது நிலைப்பாடு. சமர்ப்பணத்தில் இந்தியாவை ஈடுபடுத்தக் கோரி ஒருமைப்பாடாக நேசக்கரம் நீட்டுவதே முதன்மை பெற வேண்டும், அதை தொடர்ந்து வரும் இணக்கங்களில் அபிலாஷைகள் இழையோடப்பட வேண்டும்.




ரெலோ பகுதியினரோ சில வார்த்தைப் பிரயோகங்கள்தான் சமர்ப்பணத்தின் உள்ளடக்கங்களைக் கட்டப்படுத்துகிறது என்கிறார்கள்.

**624 எந்த வார்த்தை பிரயோகங்கள், நோக்கங்களையோ உள்ளடங்களையோ கஷ்டப்படுத்துகின்றன என்கிறார்கள்?**

நகல்களைப் பார்வையிடாமல் அனுமானிக்கத்தான் முடியும். ரெலோ தரப்பு கொடுத்த நகலை மாற்றித் திருத்தம் செய்து, கொழும்புக் கூட்டத்தில் பூர்வாங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நகல், பின் அதில் மாற்றவெண்டுமென்று சுமந்திரனது வீட்டில் நடந்த கூட்டத்தில் அந்த மாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டன. பின் சம்பந்தன் அதற்கு ஒத்து வரவில்லை எனவும் தமிழரசு கட்சி தங்களது முன்னைய நிலைப்பாட்டிலிருந்து இறங்கி வராது எனவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழர் தகவல் நடுவம் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின் சமர்ப்பிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட சமர்ப்பணத்தில் கூறப்பட்டவைகளும் இன்றைய நிலையில் இந்தியாவை அமுல் படுத்த கோரியவைக்கும் மேலாக எதனை முன்வைப்பதில் வார்த்தை பிரயோகங்கள் கஷ்டப்படுத்துகின்றன எனப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவை மக்கள் தீர்மானிக்க வேண்டியவை.

இந்த விதண்டாவாதங்களை பார்க்கும் போது ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது. இளம் சட்டத்தரணியாக இருந்த நாள்களில் தமிழில் சட்ட நடவடிக்கைகள், சட்ட வாதங்கள் மேற்கொள்ளலாமா என வாதப் பிரதி வாதங்கள், விவாதங்களாக நடந்தன. நீதிமன்றங்கள் சிங்களம், தமிழுக்கு மாற வேண்டுமென்று சட்டங்கள் முனைப்பெடுத்த காலம். அதில் ஒரு விவாத அரங்குக்கு தலைமை தாங்கிய கலைமகள் ஆசிரியர் சி.வா ஜகநாதன் சொன்ன கருத்துக்கள் இன்றும் பசுமையாக என் மனதில் உள்ளன. 'செய்யலாம்' என்பதற்கு உதாரணமாக அவர் விளக்கியது மனுநீதி சோழனுக்கு முன்னால் கன்றை இழந்த தாய் பசு கேட்ட நீதிதான். மனு நீதி சோழன் ஆராய்ச்சி மணியை அடித்த தாய் பசுவைக் கண்டு மந்திரியிடம் விளக்கம் கேட்கிறார். இளவரசனது தேரில் சிக்கி இளம் கன்று இறந்தது மந்திரிக்கு தெரியும். பசுவுக்கோ தன் பங்கை உரைக்க உதவி இல்லை. தன் பக்க மனுவுக்கும் அரசனின் மந்திரியைத்தான் நம்பியது. ஆகவே இயற்கை நீதியின் அடிப்படையில் பசுவின் பக்கத்தை பாதகமற்ற முறையில் தெரிவிக்க வேண்டும், அதே சமயம் இளவரசன் பக்கத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். மந்திரி ஆராய்ந்து, தேர்ந்த வார்த்தைகளை சி.வா.ஜகநாதன் விளங்கப்படுத்தினார். 'மன்னவனே உனது மகன்' என்று சமர்ப்பித்திருந்தால் பசுவிற்கு நியாதிக்கம் கிடைக்காது. ஏனெனில் மன்னன் குற்றமிழைக்க மாட்டான் (King can do no wrong) என்ற பாதுகாப்பின் (Immunity ) அடிப்படையில்


கி.வா.ஜகந்நாதன்

மேலும் விசாரிக்காமல் பசுவின் மனு நிராகரிக்கப்படலாம்.

பசுவின் மனு விளக்கத்திற்கு வராமல் தள்ளப்படலாம், அதற்கு நியாதிக்கம் வேண்டுமென்பதற்காக மந்திரி தேர்ந்த வார்த்தைகளையும் பதங்களையும் விளங்கப்படுத்தினார். நோக்கம் பசுவின் மனு கேட்கப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என்பது.

மனுவிற்கான (Plaint) பின்னணி இதுதான். மன்னரின் மகன் அரசனுடைய மணிகட்டிய உயர்ந்த தேரில் பரிவாரங்கள் இழுத்து வர, இடையில் வந்த பசுக் கன்று தேர்சில்லில் அகப்பட்டு இறந்து விட்டது.

இளவரசனைப் பொறுத்தளவில் அரசன் குற்றமிழைக்க மாட்டான் என்ற பாதுகாப்பு இருந்தது. அவன் ஓட்டி வந்த அரசரின் உயர்ந்த தேர் மணி கட்டியது. ஓசையுடன் அசையும் அரசரின் பிரத்தியேக தேர். வீதியில் பரிவாரங்களுடன் போகும் போது கன்று அதனைக் கண்டிருக்கும். அதையும் மீறி குறுக்கே ஓடித் தேர்சில்லில் அகப்பட்டால் அது தானாகவே தேடிக் கொண்டது என்பதுதான். இதில் யார் என்ன செய்ய முடியும்? இளவரசனைத் தப்பு சொல்ல முடியாது. ஆனால் மந்திரியோ இளவரசனை பாதுகாக்க கூடிய சொல்லாடலைத் தவிர்த்து நியாயாதிக்கத்தை பசுவிற்கு தந்து, பின் தான் உறவை வெளிப்படுத்துகிறார்.

'வளவ (வளங்கள் நிறைந்தவனே) நின் புதல்வன் பின் ஆங்கோர் மணி நெடுந்தேர் மேல் ஏறி அளவில் தேர்த்தானை சூழ (பரிவாரங்களோடு) அரசுலாத் தெருவில் போகுங்கால்

இளையஆன் கன்று ஒன்று இடைப்புகுந்து (இந்த பரிவாரம் மணி ஓசை எல்லாவற்றையும் கேட்காது குறுக்கே ஓடி) இறந்ததா தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தத் தின்மை என்றான்."

மன்னவனே, உன் மகனில் இவற்றாக் குற்றம் காண முடியாது. ஆனால் தாய்ப்பாசத்தால் தவித்து இந்த தாய்ப்பசு நீதிக்கு முறையிடுகிறாள் என்று விளக்கம் தந்தார்.

ஒரு வழியில் இவர்கள் எழுதும் சமர்ப்பணமும் இதைப் போன்றதுதான்.

தமிழ் மக்கள் அறிந்தோ அறியாமலோ ஒரு வல்லரசுடன் மோதிப் பகைத்து சிதைந்து விட்ட அவர்களின் தேசியத்துக்காக நீதியும் அனுசரணையும் கேட்கறார்கள். நோக்கங்கள் நேர்மையானால், கோரிக்கைகளுக்கு, மந்திரியின் வார்த்தையாடல்களே முன் மாதிரியாக உண்டு.

ஆனால் இங்கோ சிறு குடல் பெருங்குடலையும், பெருங்குடல் சிறுகுடலையும் விழுங்க பார்க்கும் தந்திரங்களில் அவற்றுக்கு ஏற்றவையாக வார்த்தைகள் தேடுவது கடம்தான்.

**625.தமிழ்மக்கள் இனப்படுகொலைக்கு நீதி தேடி ஐ.நா. வரை போக இங்கு அவர்களில் ஒரு பகுதி அரசியல்வாதிகளின் முனைப்பில் விடுதலை போராட்டம் பிறந்த மண்ணில் பட்டத்திருவிழாவிற்கு இனப் படுகொலையைக் கட்டமைத்தவர்களையே பிரதம விருந்தினர்களா அழைக்கிறார்களே?**

தமிழ் மக்களின் அரசியல், தன்நலத்தால் எவ்வளவு தாழ்ந்து போய், சீரழிந்து, சீர்கெட்டுப்போயுள்ளது என்பதை இவை காட்டுகின்றன. போர் நிறுத்தம் முடிந்து மீண்டும் போர் ஆரம்பமாகிய காலங்களில் தடம் மாறிச் செயல்பட்ட பெருச்சாளிகளைக் குறிப்பிட்டேன். விடுதலைப் போராட்டத்தால் பிழைத்தவர்கள் அவர்கள். அவர்களிடம் வசதிகள் உண்டு. தாங்கள் வழிமுறையற்று தேடிய செல்வங்களை முதலீடு செய்ய, அவற்றால் திரும்பவும் அதிகாரங்களைப் பெற்று விடத் துடிக்கிறார்கள். இவற்றையே தட்டிக்கேட்காத மக்களுக்காக, விடுதலைப் புலிகள் ஏன் சயனைட் குப்பிகளைக் கழுத்தில் கட்டிக் கொண்டு மாண்டார்கள் என்று வித்தியாதரன் கேட்பதிலும் நியாயம் உண்டு.

அரசியல் அப்படியான சீரழிவுகளில் போகப் போகிறது எனில், இனப்படுகொலைக்கான நீதியும், ஒப்பந்தம் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் 13ஆம் திருத்தமும் எதற்காக என்ற கேள்வியும் எழுகிறது.

(வளரும்...)

# சுசில் பதவிநீக்கத்துடன் அரசின் வீழ்ச்சி ஆரம்பம்!

## இராதாகிருஷ்ணன் சாட்டை



மக்களுக்காக பேசிய அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவியில் இருந்து நீக்கியது அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான ஆரம்பம் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் புஸ்ஸல்லாவ பிரதேச தோட்டத் தலைவர்களுக்கான சந்திப்பு ஒன்று புஸ்ஸல்லாவ மலையக மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளில் சிரேஷ்ட அரசியல்வாதியும் சட்டதரணியுமாவார்.

இலங்கையில் பல அமைச்சு பதவிகளையும் சில அரசியல் கூட்டணி கட்சிகளின் செயலாளராகவும் இருந்துள்ளார். நல்ல அரசியல் அனுவபம் உள்ளவர். நாட்டுக்காக பல உன்னத சேவைகளைச் செய்யதவர்.

இவரை பதவியில் இருந்து விலக்கியது ஒரு கோமாளித்தனமான விடயமாகும். இந்த செயற்பாடு தற்போதை அரசாங்கத்தின் வங்குரோத்து அரசியலை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களான வாசுதேவ நானயகார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன் பில, நிமல் லன்சா போன்றவர்களும் அன்மைக் காலமாக அரசாங்கத்தை விமர்சித்து வருகின்றனர்.

இவர்களுக்கு எந்த நடவடிக்கையும் இல்லை. மக்களுக்காக மக்கள் பிரதிநிதி என்ற வகையில் உண்மையை பேசிய முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை பதவியில் இருந்து விலக்கியுள்ளார்கள்.

இவ்வாறன சந்தர்பத்தில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப செயற்பட வேண்டும். இதற்கு நீங்களும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்று அவர் மேலும் கருத்து தெரிவித்தார்.

# மட்டக்களப்பு கிரான்குளம் பிரதான வீதியில் விபத்து!

## ஐவர் படுகாயம்

மட்டக்களப்பு - கிரான்குளம் பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 5பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான்குளம் பிரதான வீதியில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. இந்த வாகன விபத்தில் 5 பேர் படுகாயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் கிராமத்திலிருந்து குடும்ப உறவினர்கள் ஒன்றிணைந்து திருகோணமலைக்குச் சுற்றுலா சென்று வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் கிரான்குளம் பிரதான வீதியில் வைத்து அதிகாலை வேளையில் வான் பாதையை விட்டு விலகி இலங்கை மின்சாரசபை மின்கம்பத்தில் மோதுண்டு இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றது.

இதனால் வான் மற்றும் மின்கம்பம் சேதமடைந்துள்ளது. இந்த விபத்து சம்பந்தமாக காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# மக்களுக்கு செயலாற்ற முடியாதவர்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கியிருங்கள்!

## விஜேதாஸ அறிவிப்பு



மக்களுக்காக செயலாற்ற முடியாத அரசியல்வாதிகள் வீடுகளில் இருக்க வேண்டும் என ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டையும் அதன் மக்களையும் நேசிப்பவர்களுக்கு அமைச்சு பதவி என்பது ஐந்து சதத்துக்கும் பிரயோசனம் அற்றது என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு விற்பதற்கு எடுத்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தமையால் பதவியில் இருந்து தான் நீக்கப்பட்டார் எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அரசாங்கமா எதிர்க்கட்சியா என்பது முக்கியமல்ல. மக்களுக்காக பேசுவதே மக்கள் பிரதிநிதிகளின் முதற் கடமை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, நாட்டு மக்களுக்காக குரல்கொடுக்க முடியாத அனைத்து அரசியல்வாதிகளும் வீடுகளில் இருக்க வேண்டும் என்றும் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

# டொலர் பற்றாக்குறையினால் சோள இறக்குமதி நிறுத்தம்!



டொலர் பற்றாக்குறை காரணமாக சோளத்தை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய மிருகவள அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த சபையால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு அவசியமான ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதிலேயே சிக்கல் நிலவுவதாக அந்த சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமித் கமகே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்துள்ளபோதிலும் அதனை இறக்குமதி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனையடுத்து, பயிர்ச்செய்கையாளர்களிடம் இருந்து சோளப் பயிரைக் கொள்வனவு செய்து கால்நடைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக மிருகவள அபிவிருத்தி சபையின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள சுமத் கமகே தெரிவித்துள்ளார்.

# ஊழல் இல்லாத ஆட்சி அவசியம்!

## அநுர வலியுறுத்து



ஊழல் இல்லாத நாட்டை கட்டியெழுப்ப பொது நிலைப்பாடு ஒன்று அவசியம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதியில் மக்கள் பொருளாதார அடிப்படையிலோ பொருளாதார பிரச்சினைக்காகவோ அரசாங்கத்தைத் தெரிவுசெய்யவில்லை என சுட்டிக்காட்டினார்.

ஆனால் தற்போது பொருளாதாரம் சீர்குலைந்துள்ளமையாலேயே மக்கள் அரசாங்கத்தை மாற்ற வேண்டும் எனக் கோருகின்றனர் என அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

ஆகவே, நாட்டைக் கட்டியெழுப்ப ஊழல் இல்லாத ஆட்சி அவசியம் என அநுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

# அடையாள பணிப்புறக்கணிப்பில் சுகாதாரத் துறை ஊழியர்கள்!

தென் மாகாணத்தில் தாதியர்கள், நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் மற்றும் இடைநிலை சுகாதார ஊழியர்கள் அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, நேற்று காலை 7 மணி முதல் இன்று காலை 7 மணி வரை இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் என சுகாதார தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

பதவி உயர்வுகள் உரிய முறையில் வழங்கப்படாதமையால் சுமார் 13 ஆயிரம் தாதியர்களுக்காக பதவி உயர்வுகள் இல்லாமல் போயுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் அத்தியாவசிய மற்றும் அவசர சிகிச்சைகள் முன்னெடுக்கப்படும் என காதார தொழிற்சங்க ஒன்றியத்தின் இணை ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைகள், அமைச்சுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், தென் மாகாணத்திலுள்ள 9 ஆதார வைத்தியசாலைகள், அனைத்து பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் 47 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் சுகாதார ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# பசுமை விவசாயத் திட்டத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை பாராட்டு

கொழும்பு, ஜன. 06

இலங்கையின் பசுமை விவசாய வேலைத் திட்டத்துக்கு, ஐக்கிய நாடுகள் சபை பாராட்டுகளைத் தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் திருமதி கனி விக்ன ராஜாவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி கனி விக்னராஜா, ஐக்கிய நாடுகள் அபி விருத்தி வேலைத்திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளராகவும் செயற்படுகிறார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது, 2021 பேண்தகு அபிவிருத்தி அறிக்கையின்படி இலங்கை மேலும் ஏழு புள்ளிகளைப் பெற்று, 165 நாடுகளில் 87 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதென, திருமதி விக்னராஜா சுட்டிக்காட்டினார்.

இந்நிலைமையை மேலும் மேம்படுத்தி, பசுமை விவசாய வேலைத்திட்டத்துக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதாரப் பாதிப்புகள் தொடர்பில் உரையாற்றும் போது, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக இலங்கை முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்றத்துக்கு நிலையான தீர்வுகளுடன் கூடிய பசுமை இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதிச் செயலணி மற்றும் பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான செயலணி உள்ளிட்ட முறையான கட்டமைப்பு ஒன்று இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதென, ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரொபர்ட் ஜுஹ்காம் , பிரதி வதிவிடப் பிரதிநிதி மாலின் ஹெர்விக், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 'வைஸ் வுமன்' தேசிய வேலைத் திட்டம் ஜனாதிபதி கோட்டா தலைமையில் ஆரம்பம்



கொழும்பு, ஜன. 06

பெண்களை முழு ஆற்றலுடன் மேம்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிக்கக் கூடிய வகையிலான வைஸ் வுமன் தேசிய வேலைத்திட்டம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் பெண்களின் சனத்தொகை 52 சதவீதம் ஆகும். ஆனால், மொத்தச் சனத்தொகையில் தொழிற்படைக்கான பெண்களின் பங்களிப்பு 30 சதவீதமென்ற குறைந்தளவு வீதத்திலேயே இருப்பதாகக் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. பெண்களுக்கான திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கி, அதன் மூலம் அவர்களைத் தேசிய பொருளாதாரத்துக்குப் பங்களிக்கச் செய்வதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும். திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் மூலம் இது செயற்படுத்தப்படுகிறது.

பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி நாட்டின் முன்னேற்றத்துக்குப் பங்களித்த பேராசிரியர் நிலீகா மளவிகே, கலாநிதி ஆா டி வொஸ், கஸ்தூரி வில்சன், நிபுனி கருணாரத்ன, மெலனி வகஆரச்சி, பவித்ரா குணரத்ன, ரங்கனா வீரவர்தன, அயந்தி குணசேகர, நெல்கா ஷிரோமாலா மற்றும் திலங்கா அபேவர்தன ஆகியோர், ஜனாதிபதியின் கரங்களால் சிறந்த பெண்மணிகளாக விருது பெற்றனர்.

எமது நாட்டில் பெண்களைப் பலப்படுத்தும் போது, அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக எந்தவொரு சவால்களையும் எதிர்கொள்வதில் எவரும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படவேண்டிய நிலைமை ஏற்படாதென, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

பூமியில் கிடைத்த இரத்தினங்களை விட மெருகூட்டப்பட்டதும் எப்போது கிடைக்கும் என்றே தெரியாத எண்ணெய் சுரங்கங்களை விட மதிப்புமிக்கதுமான பெண் தொழிற்படையினர் நம் நாட்டில் உள்ளனர். தொற்றுப் பரவல் காலங்களில் கூட எழுந்து நிற்கும் வலிமை நம்மிடம் இருக்கிறது என திருமதி சீதா அரம்பேபொல குறிப்பிட்டார்.

அமைச்சர் தினேஸ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான விஜித பேருகொட, பியல் நிஷாந்த, தூதுவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பெண்கள் உள்ளிட்ட பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோதமாக ஐரோப்பா செல்ல முற்பட்டவரே யாழில் இனங்காணப்பட்ட மலேரியா தொற்றாளர்!

## வைத்தியர் ஜமுனானந்தா தகவல்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை மலேரியா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவருக்கு பிளாஸ்மோடியம் ஃபால்ஸிபோரம் என்ற மூல மலேரியாவை ஏற்படுத்தும் கிருமி காணப்பட்டது. இவர் அண்மையில் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள நாடுகளுக்குச் சென்றுள்ளார். இது ஓர் ஆபத்தான சூழ்நிலையை எடுத்துக்காட்டுகிறது என யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு –

நமது நாட்டிலிருந்து பலர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகச் செல்வதற்கு எத்தனிக்கின்றனர். அவர்கள் அங்கு செல்வதற்காக முதலில் ஆபிரிக்க நாடுகளுக்குச் செல்கிறார்கள். அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான பயணங்கள் தடைப்பட்டதும் மீண்டும் திருட்டுத்தனமாக எமது நாட்டுக்குள் வருகின்றார்கள்.

இவர்கள் மலேரியா உள்ள இடத்திலிருந்து வருகின்றார்கள். அவர்களுக்கு அந்த நாடுகளில் சிலவேளை மலேரியா காய்ச்சலும் ஏற்பட்டு இருக்கலாம். இவ்வாறு வருபவர்கள் மீண்டும் எமது பிரதேசத்தில் மலேரியாவைத் தோற்றுவிக்கின்றார்கள்.

மிக அண்மையில் 3 மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டமை பாரியதொரு அபாய நிலையை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எனவே, நாங்கள் எமது மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும். காய்ச்சல் இருக்கும் வேளையில் அவர்கள் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டால் மலேரியா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் மலேரியா உள்ள நாடுகளுக்குச் சென்று வந்தால் அதற்குரிய தடுப்பு மருந்துகளை எந்த ஒரு



வைத்தியசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். தற்போது 3 மலேரியா நோயாளிகள் இனங்காணப்பட்டதால் எமது பிரதேசத்திலிருந்து வரும் அனைவருக்கும் மருத்துவ சோதனை செய்தால் நல்லது. அடுத்ததாக நாங்கள் நுளம்பு கட்டுப்பாட்டையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

குறிப்பாக தற்போது மலேரியா நோய் இனங்காணப்பட்டால், மலேரியா கிருமி ஒருவரில் குறைந்தது 21 நாள்கள் வரை இருக்கலாம். அத்துடன் நுளம்பிலும் 21 நாள்கள் வரை இருக்கலாம்.

எனவே 21 நாளகளுக்கு நாங்கள் எமது சுற்றாடலைச் சுத்தப்படுத்துவதால் இந்த மலேரியா கிருமி எமது சமூகத்தில் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். இதற்குரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை யாழ். மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை என்பன முன்னெடுத்தால் நல்லது. வருமுன் காப்பதால் பெருமளவு நோய் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

இது தற்போதைய காலத்தின் கட்டாயமாகும். குறிப்பாக கொவிட் தொற்றுக்குப் பின்னர் பல நாடுகளில் மலேரியா மீண்டும் வருவது கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில் இலங்கையும் பாதிக்கப்பட்டதை நாம் விழிப்புடன் உணர்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லை மூங்கிலாறு சிறுமி உயிரிழப்பு: கைதானவர்களுக்கு விளக்க மறியல்!

முல்லைத்தீவு – மூங்கிலாறு சிறுமி உயிரிழப்பு தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 5 சந்தேக நபர்களும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி மூங்கிலாற்று பகுதியில் காணாமல்போன சிறுமி 18 ஆம் திகதி கிராமத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுமி கொலை தொடர்பில் தாய், தந்தை, சகோதரி, மைத்துனர், மைத்துனரின் தம்பி ஆகியோர் கைது செய்யப்பட்டு 04.01.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் வழக்கு விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் சந்தேக நபர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்துக் கொள்ளப்படாத நிலையில் காணொளி ஊடாக வழங்க விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி அனைவரையும் எதிர்வரும் 18.01.21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 19.12.21 ஆம் திகதி உயிரிழந்த சிறுமியின் சகோதரியின் கணவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 24.12.21 அன்று உயிரிழந்த சிறுமியின் தாய், தந்தை, சகோதரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கிராமத்தில் பலரிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார் மேலும் சிறுமியின் மைத்துனரின் தம்பியாரையும் கடந்த வாரம் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இவர்களின் வழக்கு விசாரணை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இவர்களை எதிர்வரும் 18.01.2022 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சிறுமி உயிரிழப்பு தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் தொடர்ந்தும் கிராமத்தில் பலரிடம் வாக்கு மூலம் பதிவுசெய்து வருகின்றமையுடன் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

# வவுனியாவில் அடாவடியில் ஈடுபட்ட இரண்டு பேர் உட்பட நால்வர் கைது!

வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் பொலிஸார் முன்னிலையில் அடாவடியில் ஈடுபட்ட இருவர் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தக நடவடிக்கைகள் அதிகமுள்ள வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கைத்தொலைபேசி விற்பனை நிலையத்துக்குச் சென்ற சிலர் அங்கிருந்தவர்களுடன் முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு ஆதரவாக பண்டாரிகுளம் மற்றும் கோவில்குளம் பகுதிகளிலிருந்து முதலாம் குறுக்குத் தெருவிற்குக் குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

முரண்பாட்டில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் இடையே கைகலப்பும் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவ இடத்திற்குச் சென்ற குழுக்கள் சிலரிடம் கோடாரி மற்றும் அபாயகரமான ஆயுதங்களும் வைத்திருந்தனர் எனவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற பொலிஸார் இரண்டு மணிநேர விசாரணைகளின் பின்னர் குறித்த வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு அங்கிருந்த இருவரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதனிடையேவெளியே அவர்களுக்கு ஆதரவாக இரு குழுக்களின் ஆதரவாளர்கள் பலரும் நின்றிருந்தனர். அதில் சில செல்வாக்கானவர்கள் பொலிஸாருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட முற்பட்டபோது பொலிஸார் முன்னிலையில் அடிதடியில் ஈடுபட்ட இருவரையும் கைது செய்தபோது அவர்களுக்கு ஆதரவாக வந்த பலர் தப்பிச் சென்றுவிட்டனர்.

அங்கு குழுமியிருந்தவர்களை விரட்டிய பொலிஸார் நிலைமைகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உடும்பை வேட்டையாடிய குற்றம்: அக்கராயனில் ஒருவர் கைதானார்!

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது உடும்பை வேட்டையாடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து உடும்பு ஒன்றும் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த பொலிஸார் நேற்று (செவ்வாய்க்கிழமை) கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

இந் நிலையில், குறித்த குற்றத்துக்காக 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், உயிருடன் மீட்கப்பட்ட உடும்பை பாதுகாப்பாக விடுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

# ஒருவரைக் காவு கொண்ட முதலை வெள்ளவத்தை கால்வாயில் உள்ளது

## மக்களே அவதானம்

தெஹிவளை கடற்பரப்பில் ஒருவரின் உயிரைக் காவு கொண்டதாக சந்தேகிக்கப்படும் முதலை, நேற்று (புதன்கிழமை) காலை வெள்ளவத்தையில் உள்ள கால்வாயில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, வனவிலங்கு அதிகாரிகள் பலரின் உதவியுடன் முதலையை உடனடியாகக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

14 அடி நீளமுள்ள முதலை அப்பகுதியில் சுற்றித் திரிவதாக உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 3 ஆம் திகதி தெஹிவளை கடற்பரப்பில் நீராடச் சென்ற ஒருவர் முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, கல்கிசை மற்றும் தெஹிவளை கடற்கரைக்குச் செல்லவேண்டாம் எனப் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர் சாவு!

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 23ஆம் திகதி சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதன் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக குறித்த சந்தேகநபர் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் எனச் சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# வடக்கு – கிழக்கு தமிழ் தேசத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் கருத்து



இந்தியா வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு தமிழ் தேசத்தை அங்கீகரிக்கும் முகமாகத் தனது அரசியல் நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதைவிடுத்து தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தூக்கிக் கொண்டு சீனாவைத் தடுக்கும் முகமாக நீங்கள் உங்களுடைய முகவர்களைப் பாவித்து பல கூட்டுக்களையும் பல ஒப்பந்தங்களையும் செய்து அதன் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும். என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசடி பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்டக் காரியலயத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 22 ஆவது நினைவேந்தல் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அந்த கொடிய யுத்தம் நடந்து கொண்ட காலத்திலே தமிழினத்துக்கு நடந்த பல விரோத செயல்களைப் பல ஊடகங்கள் உண்மையைக் கொண்டுவர பயப்பட்டவேளையிலே அந்த காலத்தில் இருந்த அரசின் அடக்குமுறையால் ஊடகம் எல்லாம் தணிக்கை செய்யப்பட்டிருந்தன.

அப்போது தமிழ் மக்களுக்கு வடக்கு - கிழக்கிலே நடந்த கொடூர இனப்படுகொலைகள், கொடூர சம்பவங்கள், அச்சுறுத்தல்கள், காணாமல்போகச் செய்யப்பட்ட விடயங்களை உடனுக்குடன் அறிவிப்பதற்கு ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த வேளையிலே மாமனிதர் குமார் பொன்னம்பலம் கொழும்பிலே சிங்கள கோட்டையிலே துணிச்சலுடன் தமிழ் மக்கள் ஒரு நீதிக்காக போராடுகின்றனர் என்றார்.

தமிழ் மக்கள் ஓர் அடக்குமுறைக்குள் உட்படுகின்றார்கள் அதனை எதிர்த்துத் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுகின்றார்கள். என அந்த ஆயுதப் போராட்டதை உலகத்துக்கு சர்வதேச ஊடகங்கள் ஊடாக நியாயப்படுத்தி தெரியப்படுத்தி வந்தார் அமரர் குமார் பொன்னம்பலம்.

இவ்வாறு செயற்பட்டமையால் அவர் சந்திரிக்கா அமையார் காலத்தில் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அன்று குமார் பொன்னம்பலம், நீங்கள் யுத்தத்தை நிறுத்தா விட்டால் இந்த நாடு எதிர்காலத்தில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் தள்ளப்படும். நாட்டு மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்படுவார் எனக் கணித்து அன்று கூறினார். அப்போது இருந்த அரசியல் தலைவர்கள் அவரின் கருத்தை நிராகரித்தனர்.

தமிழ் மக்களுடைய இன விடுதலைப் போராட்டம் ஒரு நியாயமான போராட்டம். சிங்கள மக்கள் போன்று தமிழ் மக்களும் சமமாக வாழவேண்டும் அதற்காகத்தான் போராடுகின்றனர் என்று அன்று குமார் பொன்னம்பலம் கூறினார் அவ்வாறு பல புத்திஜீவிகள் நியாயப்பாட்டை சொல்லும் போது அந்தக்காலத்தில் படுகொலை செய்யப்பட்டனர்.

எனவே, அந்த காலத்திலே ஓர் இனத்தைக் குறிவைத்து அவர்கள் போராடியதால் இன்று இந்த நாடு அதலபாதாளத்துக்கு போயுள்ளது. இந்த விடையங்களை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

பொதுவாக இலங்கை மீது கண்வைத்துள்ள நாடுகள் தங்களுடைய நாடுகளின்; நலன் கருதி கொண்டு இந்த இலங்கை தீவிலே தாங்கள் நினைத்தவாறு அரசியலை நடத்துவதாக இருந்தால் இதற்கு வடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் மக்கள் ஒரு போதும் ஒத்துழைக்கமாட்டோம்.

இங்கே சீனா கால் ஊன்றி இருக்கின்றது சீனாவைத் தடுக்கும் முகமாக இந்தியா தங்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு பல கூட்டுக்களையும் பல அரசியல் தலைவர்களையும் தங்களுக்கு ஏற்ற மாதிரி பாவித்து ஒட்டு மொத்த தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கின்ற வகையில் அவர்கள் செயற்படுகின்றார்கள்.

எனவே நீங்கள் உங்களுடைய முகவர்களை பாவித்து பல கூட்டுக்களையும் பல ஒப்பந்தங்களையும் செய்து அதன் மூலம் மக்களை ஏமாற்றுகின்ற பலக்கனவை நீங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

எங்களுடைய மக்களின் நியாயமான போராட்டத்தைக் கருத்தில் கொள்ளாவிட்டால் நிச்சயமாக உங்களுடைய நாட்டுக்கு சீனா அல்ல தெற்காசியாவிலுள்ள பல நாடுகள் உங்களைக் குறிவைக்கும்.

இந்த நாடு உண்மையிலே சீனாவின் கடன் எல்லைக்குள் அகப்பட்டிருக்கின்றது. சீனா வடக்கு கிழக்கில் கால் ஊன்ற எத்தனிக்கின்றது. நாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர். இந்தியாவின் செல்ல பிள்ளைகளாக நாங்கள் யோசிக்கின்றோம். ஆனால், நீங்கள் அவ்வாறு இல்லை. நீங்கள் எங்களைப் பகடைக்காயாகவும் அடிமைகளாகவும் பாவிக்க எத்தனிக்கின்றீர்கள்.

எனவே, அந்த விடயத்தை கையைவிட்டு - நீங்கள் கடந்த 70 வருடகாலமாகப் போராடிவருகின்ற எமது இந்த மக்களை அடிமைகளாக்க நினைப்பதைக் கைவிட்டுவிட்டு - தமிழ் மக்கள் விரும்புகின்ற வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு சுயநிர்ணயத்துடன் அங்கீகரிக்கப்பட்ட இறையாண்மையுள்ள ஒரு தமிழ் தேசத்தை அங்கீகரிக்கும் முகமாக நீங்க அரசியல் நடவடிக்கையை எடுக்கவேண்டும்

மாறாக, ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்புக்கு எதிராகப் போராடிவருகின்ற வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களை அதனை முடக்கும் விதமாக நீங்கள் செயற்படுவதாயின் மக்கள் புரட்சி வெடிக்கும். அதேவேளை, எங்கள் அரசியல் அபிலாஷைகளுக்கு உங்களைத்தாண்டி உலகத்தில் எங்களுடைய கருத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்குத் தெரியப்படுத்துவோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்பது வெறும் உங்களுடைய நலனுக்காக இலங்கையை உங்கள் கட்டுப்பாட்டுக்கு வைத்திருக்க போடப்பட்ட ஒப்பந்தம். தமிழ் மக்கள் நலன்கருதி நீங்கள் போடவில்லை. 34 வருடங்களுக்கு மேலாக அன்றே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்தம் அது. எனவே, மீண்டும் நீங்கள் பழையதைத் தூக்கிக் கொண்டுவந்து தமிழ் மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்ல நீங்கள் எத்தனிக்கக் கூடாது. - என்றார்.

# கொரோனா தொற்றில் இருந்து மேலும் 141 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 141 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 61 ஆயிரத்து 412 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 88 ஆயிரத்து 929 ஆக பதிவாகியுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 55 ஆக பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## தவறான பயணத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் காரணம். ஜனாதிபதித் தேர்தலின்போது எமது 15 இலட்சம்வாக்குகள்தான்தீர்க்கமானவையா மாறின. அன்று 'மொட்டு' கட்சியுடன் வரச் சொன்ன மக்கள், இன்று மீண்டும் அந்தக் கட்சியுடன்வேண்டாம்எனச்சொல்கின்றனர். நாம் மக்கள் பக்கம் நின்றே முடிவெடுக்க வேண்டும். இந்த அரசை விமர்சிக்கும் உரிமை எமக்கும் இருக்கின்றது.

அரசிலிருந்து வெளியேறும் காலப்பகுதியை எமது கட்சியின் மத்திய குழு தீர்மானித்தால் நாம் வெளியேறுவோம். அது வரை அரசியல் இருப்போம். அரசை தவறான வழியில் செல்ல இடமளிக்க மாட்டோம். அவ்வாறு சென்றால அதற்கு எமது ஆதரவு இருக்காது. அரசுக்கு உரிய நேரத்தில் பதிலடி வழங்கவும் நாம் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

## ஆரியகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில், தனியார் நிதிப் பங்களிப்புடன் ஆரியகுளம் அழகுபடுத்தப்பட்டு, பொழுதுபோக்குத் திடலாகப் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டிருந்தது. ஆரியகுளப் புனரமைப்புப் பணிகளின் போது, மதச் சின்னங்களை நிறுவுவதில் இழுபறி நிலை தோன்றியிருந்தநிலையையில், எந்தவொரு மத அடையாளத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான கட்டமைப்பெதனையும் அமைப்பதில்லை என்று மாநகர சபையில் தீர்மானம் இயற்றப்பட்டிருந்தது.

எனினும், அரசமைப்பின் படி மத அனுட்டானங்களைத் தடுக்கும் அதிகாரம் சபைக்கு இல்லை என்று சுட்டிக் காட்டியிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டதுதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் மாநகர ஆணையாளரைப் பணித்திருக்கிறார்.

மேலும், சமயத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் தன்னைச் சந்திப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் அந்தக் கடிதத்தில் ஆளுநர் குறிப்பிட்டிருக்கிறார்.

## மணியும் குமாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றாகும்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இடமொன்றில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தலைமையிலான அணியினர் குமாரின் உருவப்படத்துக்குச் சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

## பகிடிவதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த மாணவனை உடனடியாக விடுதியில் இருந்தும் வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன சிரேஷ்ட மாணவன் மீதே விஞ்ஞான பீடாதிபதியால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில், புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கியமையுடன் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் குறித்த சிரேஷ்ட மாணவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒழுக்காற்று உத்தியோகத்தர்கள், மாணவர் நலச்சேவை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முடியும் வரை குறித்த மாணவன் உள்நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என விஞ்ஞான பீட பீடாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொண்டிருக்கும்நெருக்கடிநிலைமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நல்லிணக்கத்துடன் பயணிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு தேசிய அமைப்பை உருவாக்கி நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும்நெருக்கடிநிலைமையில்இருந்து மீண்டெழுவதற்காக நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய நேரமே இது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்களை நீக்குவது உசிதமான காரியமல்ல.

வெளியில்இருப்பவர்களையும்இணைத்துக்கொண்டு நல்லிணக்கத்துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## பிரதமர் மஹிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையின் கூட்டுத் தலைமையை ஜனாதிபதியும், பிரதமரும் வகிக்கின்றனர். இந்நிலையில், பிரதமர் மஹிந்தராஜபக்ஷவின்ஆலோசனையைப் பெறாமலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரின் சகாக்களும் சுயமாக முடிவெடுத்து சுசில்பிரேமஜயந்தவின் இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பறித்தெடுத்துள்ளனர். இது இந்த அரசின் வீழ்ச்சிக்கான ஆரம்பமாகும்.

மஹிந்தவின் தீவிர விசுவாசியாகச் சுசில் இருக்கின்றார். அரசிலிருந்து மஹிந்தவை ஓரங்கட்டவே அவரின் சகாவான சுசிலின் இராஜாங்க அமைச்சுப் பதவி ஜனாதிபதியால் பறிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளேயே அதிகாரச் சமர் மூண்டுள்ளது. எனவே, ராஜபக்ஷ குடும்ப அரசு விரைவில் கவிழும் என்பது திண்ணம் - என்றார்.

## மாமனிதர் குமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலத்தின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், சட்டத்தரணிகளான சுகாஸ், காண்டீபன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குமார் பொன்னம்பலம் 2000ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி கொழும்பு, வெள்ளவத்தை - இராம கிருஷ்ண வீதியில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டத் திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டத் திருவிழாவை இம்முறையும் நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்திருந்தனர்.

அதிகரித்து வரும் கொரோனா அச்சுறுத்தல் உள்ளிட்ட காரணங்களை முன்னிறுத்தி இம்முறை பட்டத் திருவிழாவை இடைநிறுத்துமாறு பல்வேறு தரப்பில் இருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், பட்டத் திருவிழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் பிரதேச மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று மாலை நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பட்டத் திருவிழாவை தற்கால சூழ்நிலையில் இடைநிறுத்துமாறு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து இம்முறை வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரிசி விலை மீண்டும் சடுதியாக அதிகரிப்பு

நாட்டரிசி ஒரு கிலோகிராம் 170 ரூபா வரையிலும், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 190 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளது என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எதிர்காலத்தில் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வழமையாக ஜனவரி மாதத்தில், குறித்த ஆண்டுக்கான பெரும்போக அரிசி சந்தைக்கு கிடைக்கும்.

ஆனால், உரப் பிரச்சினை காரணமாக இந்த முறை போதியளவான அரிசி சந்தைக்குக் கிடைக்கப்பெறவில்லை என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; சந்தேகநபர் ஒருவர் மரணம்!

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் 23ஆம் திகதி சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதன்பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக குறித்த சந்தேகநபர் 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி முதல் விளக்க மறியலில்வைக்கப்பட்டார்எனசிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும்!

## பாடசாலையை முற்றுகையிட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, ஸ்ரீராமபுரம் திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தின் வாயில் முன்பாக நேற்று காலை 09.45 மணியளவில் பொதுமக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

பாடசாலைக்குஆளுமைமிக்கஅதிபரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்து பாடசாலையின் வாயில் முன்பாக அப் பகுதி மக்கள்மற்றும்பெற்றோர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், கல்வித் திணைக்களமே அரசியல்வாதிகளின் கருத்துக்களுக்கு அடிபணியாதே!, கல்வித் திணைக்களமே ஆளுமைமிக்க அதிபரே எமக்கு வேண்டும், எமது பாடசாலையின் தரத்தைக் குறைக்காதே!, கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியைத் தடுக்காதே! போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என 50 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். 50 நிமிடங்கள் வரை போராட்டம் தொடர்ந்தது. (100)

# நடுக்கடலில் பழுதான நெடுந்தீவு படகு; மயிரிழையில் தப்பினர் 100 பயணிகள்



(இ.கலையமுதன்,ந.லோகதயாளன்)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான கடற்போக்கு வரத்துச் சேவை இடம்பெற்றபோது பாரிய அசம்பாவிதம் மயிரிழையில் தவிர்க்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 100 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் புறப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சமுத்திரதேவி படகு இடைநடுவில் பழுதடைந்த நிலையில் பின்னர் வடதாரகைப் படகின் உதவியுடன் குறிகாட்டுவான் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

சுக்கான் தடி உடைந்தமையால் இடைநடுவில் பயணிகளை வடதாரகைப் படகுக்கு மாற்ற முடியாத நிலையிலும் பல இடையூறுகள் மத்தியிலும் வடதாரகைப் படகால் இழுத்துச் செல்லப்பட்டது.

காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட மக்கள் காலை 10 மணியை அண்மித்தே குறிகாட்டுவான் இறங்கு துறைமுகம் வந்து சேர்ந்தனர்.

## பாய்ந்து செல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்குள்ளும், அமைச்சரவையிலும் ஒழுக்கம் இருக்க வேண்டும். கூட்டுப் பொறுப்பு பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் வெளியேறுவதற்கு முன்னர் வெளியேறுவதே நல்லது.

இந்த அரசின் வெற்றியின் பிரதான பங்காளி சுதந்திரக் கட்சி அல்ல. அப்பம் சாப்பிட்டுவிட்டுதுரோகம் இழைத்தவர்களே அங்குள்ளனர். எந்நேரத்தில் வேண்டுமானாலும் அக்கட்சியினர் துரோகம் இழைக்கலாம். எனவே, பாய்ந்து செல்வதற்கு முன்னர் வெளியேறுவதே நல்லது - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தலைமைகள் தங்களை பலப்படுத்திக்கொள்ள வேண்டும்

## இரா.துரைரெட்ணம் தெரிவிப்பு



தற்போது ஆளும் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பகரமான செயற்பாடுகள் ஒரு வகையில் எங்களை பலமுள்ளதாக மாற்றும். அதற்கேற்றாற்போல் தமிழ்த் தலைமைகள் தங்களைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா. துரைரெட்னம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்தியாவைத் தமிழர்களுக்கு விரோதமானதாக மட்டும் பார்க்காமல் தமிழர்களின் நலன்சார்ந்த விடயங்களில் இந்தியா செயற்பாடே அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு சுயாட்சி. இதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை. ஆனால், தற்காலிகமாக நாடாளுமன்றத்தில் சட்டவாக்கம் செய்யப்பட்டு அரசியல் யாப்பின் ஊடாக இணைக்கப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் பலவீனமடைந்துள்ள இந்தக் காலப் பகுதியில் தற்காலிகமாவது ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னெடுக்கவேண்டும் என்ற பகிரங்க கோரிக்கையை அவர்களிடம் முன்வைக்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியைப் பொறுத்தவரையில் புதுவருடத்தினுள் மூன்று இன மக்களுக்குமான ஒரு ஜனாதிபதி மீண்டும் மீண்டும் பௌத்த ஆதிக்கத்துடன் சிங்கள மக்களுக்கு தமது சேவையைச் செய்ய வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருந்தாலும், கடந்த காலத்தில் ஜனாதிபதியின் உரையாடல் என்பது வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும்வகையில் மீண்டும் மீண்டும் அவர் உரையை விடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி வடக்கு, கிழக்கில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கட்சியுடன் பொது இணைக்கப்பாட்டுக்குச் சென்று பொதுவாக வேலை செய்கின்ற காலகட்டத்தில் அப்படிப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அவருடன் சேர்ந்திருக்கும் காலகட்டத்தில் மீண்டும் மீண்டும் தமிழ் மக்கள் தொடர்பாக ஒரு அன்னியோன்னியமான ஒரு நல்ல விடயங்களைப் பேசாமல் குறிப்பாக மட்டக்களப்பில் உள்ள நாடாளுமன்ற பிரதிநிதிகள் மீளாய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

இந்த மீளாய்வு செய்யப்படாவிடின் ஜனாதிபதியுடன் பேசி இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட விடயங்கள் பரிசீலணைகுட்படுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் நாங்கள் பலவீனமடைந்து செல்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு உள்ளதைப் பலமாக மாற்ற வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட்டன. நாங்கள் தமிழ் தலைமைகள் நிரந்தரத் தீர்வு சுயாட்சியாக இருந்தாலும் தற்காலிகமாக நடைமுறைப்படுத்துவதற்கு 13 ஆம் திருத்தச் சட்டம் தான் கையில் உள்ளது. அதை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவிடம் கூறுவது தவறான விடயம் அல்ல.

குறிப்பாகத் தமிழ்த் தலைமைகள் கூடிப் பேசும் விடயத்தில் தமிழரசுக் கட்சி இன்னும் சரியான தீர்மானம் எடுக்கவில்லை என நான் அறிந்திருந்தேன். எனினும் நான் தமிழரசுக் கட்சிக்கு ஓர் அழைப்பு விடுக்க விரும்புகின்றேன்.

நீங்கள் சுயாட்சியைக் கேட்டுக் கடந்த காலத்திலும் முன்வைத்து இருந்தாலும்கூட பல விடயங்களைத் தற்சமயம் மீளாய்வு செய்யப்படும் போதும் தற்காலிகமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தகூடியவாறு ஒரு செயல் வடிவத்தைக் கொடுப்பது என்பது நாம் ஒட்டுமொத்தமாகத் தமிழருக்கான தீர்வை அளிப்பதற்கான சமம் என்று நினைத்துவிடக்கூடாது.

தற்சமயம் கையில் உள்ளது அமுல்படுத்துவதற்கு அனைத்து தலைமையகமாகச் சேர்ந்து ஒரே முடிவை எடுத்து நாம் இந்தியாவுடன் பேசுவதில் என்ன தவறு உள்ளது என்பதை நான் கேட்க விரும்புகின்றேன்.

அதை எதிர்காலத்தில் வருகின்ற நாள்களில் இந்த தமிழரசுக்கட்சி நல்ல முடிவுகளை எடுத்து நாங்கள் தற்காலிகமாக எனினும் இந்த விடயத்தை நடைமுறைப்படுத்த உடன் கூடிய இணக்கப்பாட்டுடன் தமிழ் தலைமைகளுடன் கூட்டுச்சேர்ந்து நாங்கள் அனைவருமாகச் சேர்ந்து இந்தியாவுடன் இந்த விடயத்தை முன்வைக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் இந்தியாவும் இதை நடைமுறைப்படுத்த சாதகமாக அமையும். இந்தியா என்பது தமிழர்களுக்கு விரோதமானது என்ற விடயத்தை என்றும் நாம் பார்த்து விடக்கூடாது.

இந்தியா முதலாவது அதன் நலன்கள் தொடர்பாகவே செயற்பட்டு. தமிழ் நாட்டையும் எங்களையும் பொறுத்தவரையில் கலாசார ரீதியான தொப்புள் கொடி உறவு என்பார்கள். அந்த உறவு இன்றும் எங்களுக்கு இருக்கின்றன. - என்றார்.

# சுசில் பிரேமஜயந்தவின் பதவி பறிப்பு கோட்டாவின் மிகச் சிறந்த முடிவே!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெருமிதம்

அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் கொள்கைகளையும் விமர்சித்த காரணத்தால் சுசில் பிரேமஜயந்த அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் சரியான தீர்மானத்தை எடுத்துள்ளார் எனவும் இதனை முன்னரே செய்திருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசுமற்றும்அரசின்திட்டம்போன்றகொள்கைகளை அவர் பல சந்தர்ப்பங்களில் விமர்சித்துள்ளார். அரச தலைவர் அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார். அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் என்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு எனக்கு உள்ளது. அந்தக் கொள்கைகளில் தவறு இருந்தால், அதைப் பற்றி பேச இடங்கள் உள்ளன. அமைச்சரவையில் பேசலாம். மேலும், இராஜாங்க அமைச்சர்கள் அரச தலைவரை சந்திக்கின்றனர். அந்த நேரங்களில் அவர்கள் அதைப் பற்றிப் பேசலாம். அவர்கள் ஓர் அணிக்காக விளையாடினால், அந்த அணிக்குள் பேச வேண்டும். அவர்கள் வெளியில் பேசக்கூடாது.

மூத்த அமைச்சர்கள் என்ற முறையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டும். முதுகெலும்பு நேராக இருக்கவேண்டும் மற்றும் உள்ளே பேச வேண்டும். அரச தலைவர் சரியான முடிவை எடுத்துள்ளார். இது முன்னரே எடுத்திருக்க வேண்டிய முடிவு. அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை புரிந்துகொள்ளாமல் அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு ஏற்புடையதல்ல. அம்பலமான அரசியலை அமைச்சரவையில் சேர்க்க முடியாது.

அமைச்சரவைக்குள் எதனையும் பேசித் தீர்த்துக் கொள்ள அரசதலைவர் பூரணசுதந்திரம் வழங்கியுள்ளார். ஆனால் அதை விமர்சிப்பது தவறு. அரச தலைவரை நம்பி இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அவருக்கு வழங்கிய ஆணையைப் பாதுகாக்க வேண்டும். எமது அமைச்சர்கள் மத்தியில் ஒழுக்கம் இல்லாமல் நாட்டு மக்களுக்கு ஒழுக்கத்தை கட்டியெழுப்ப முடியாது.

அமைச்சரவை கூட்டத்தில் பேசப்படும் வியங்கள் வெளியில் பேசப்படுவதில்லை. பயமுறுத்துவதற்காக நாம் யாரும் இவற்றைச் செய்வதில்லை.

அரசியல் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும். அரசாங்கத்தை விமர்சிப்பதுதான் எதிர்க்கட்சிகளின் பணி. அரசாங்கத்துக் குள்ளேயே அமர்ந்து எதிர்க்கட்சி வேடம் போட வேண்டியஅவசியம்இல்லை. இந்தசம்பவத்தைவிளம்பரப்படுத்துவதில் எதிர்க்கட்சிகள் இப்போது முட்டாள்தனமான மகிழ்ச்சியை அனுபவிக்கின்றன.

அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுவது மிகவும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டதாகும். இவை பற்றி முன்கூட்டி தம்பட்டம் அடிக்க மாட்டோம். அந்த விடயங்களை சரியான நேரத்தில் செய்வோம். எதிர்க்கட்சிகள் எப்போதும் இந்த நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றன. அவை இதுவரை சொன்னது, செய்தது எல்லாம் பொய்யாகிவிட்டன.

நாட்டில் உள்ள அரச ஊழியர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வீட்டுத்தோட்டம் அமைக்க பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தோட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. ஒவ்வொரு துறையையும் பாதுகாக்கும் வகையில் இந்த முடிவுகளை எடுத்துள்ளோம். இவை தேர்தலை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகள் அல்ல. நாட்டு மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்த நிவாரணங்கள் இவை. மக்களுக்கு என்ன நிவாரணம் வழங்கப்பட்டது என்று எதிர்க்கட்சியினர் எங்களிடம் கேட்டனர். இவை மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நிவாரணங்கள் என்கிறோம்.

ஜனவரி 15 இல் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் என்றார்கள். ஆனால் ஜனவரி 15 ஆம் திகதி மீரிகமவிலிருந்து குருநாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாவது பகுதியை திறந்து வைப்போம்.

அமைச்சர் பஸில் நாடு திரும்பியதும் நாடு அழியும் என்றார்கள். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது என்றார்கள். இந்த சலுகைகளை வழங்குவது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை என்பதை நிரூபிக்கிறது. - என்றார்.

# மகாதேவா - பூமாதேவி ஞாபகார்த்தமாக தரம் - 5 மாணவருக்கு மூக்குக்கண்ணாடி!





உடுவில் அமெரிக்க மிசன் பாடசாலையில் இருந்து நடைபெறவுள்ள தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பார்வைக் குறைபாடுடைய வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர் ஒருவருக்கு லயன் மகாதேவா - லயன் பூமாதேவி ஞாபகார்த்தமாக சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் நேற்று (புதன்கிழமை) மூக்குக் கண்ணாடி ஒன்று வழங்கிவைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் எஸ்.முரளிமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சுன்னாகம் லயன்ஸ் கழக நிர்வாக உறுப்பினர் லயன் க.தினேஸ் இந்த மூக்குக் கண்ணாடியை வழங்கிவைத்தார்.

சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ம.பிரிதுவிராஜாவின் அனுசரணையில் அவரது தாய் தந்தையர்களான சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் முன்னோடிகளான லயன் மகாதேவா - லயன் பூமாதேவி தம்பதிகளின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட இந்த மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி, சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வடக்கில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

**யாழ்ப்பாணம், ஜனவரி 06**

**இரண்டாவது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொதுமக்கள் பெரியளவில் ஆர்வம் காட்டவில்லை. - இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

**வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**




அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் 14 ஆயிரத்து 135 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து டிசெம்பரில் 1,381 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். ஜனவரி 4ஆம் திகதி வரை 33 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா இறப்புகளைப் பொறுத்தவரை கடந்த வருடம் செப்டெம்பரில் 386 இறப்புகள் பதிவு செய்யப்பட்ட நிலையில், அவை படிப்படியாகக் குறைவடைந்து டிசம்பரில் 41 உயிரிழப்புகள் பதிவாகின. இந்த வருடத்தில் இதுவரை 3 கொரோனா இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்பூசியைப் பொறுத்தவரை வடக்கு மாகாணத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசியை 90 வீதமானவர்களும், இரண்டாவது டோஸ் தடுப்பூசியை 80 வீதமானவர்களும் பெற்றுள்ள நிலையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை 30 வயதுக்கு மேல் 25 வீதமானவர்களே பெற்றுள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் வடக்கில் பொதுமக்கள் பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை - என்றார்.

# பருத்தித்துறை பொலிஸ் காவலில் சந்தேக நபர் தற்கொலை முயற்சி

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் தூக்கு மாட்டி தற்கொலைக்கு முயன்ற நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய்யைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் தனது மனைவியை போத்தலினால் குத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் நேற்றைய தினம் பொலிஸ் நிலையத்தில் இருந்த சிறைக் கூடத்திற்குள் தூக்கில் தொங்கியுள்ளார்.

அவர் உடனடியாக மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# மனோ அணி இன்று முடிவு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காகத் தமிழ் பேசும் கட்சிகளின் சார்பில் தயாரிக்கப்படும் பொது ஆவணம் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று வியாழக்கிழமை இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

இதற்காக அக்கூட்டணியின் அரசியல்குழு இன்று அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக்குழு கூட்டம் 'ஒன்லைன்' மூலம் நேற்று நடைபெற்றது. கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் உட்பட தலைமைக்குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் என அறியப்படும், இலங்கை அரசமைப்பில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு அதிகார பரவலாக்கல் சட்டத்தை முழுமையாக அமுலாக்க உரிய அறிவுறுத்தல்களை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதான தரப்பு என்ற முறையில், இலங்கை அரசுக்குக் கொடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் சார்பாக எழுதப்படவுள்ள பொது ஆவணம் தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'திண்ணைக் கலந்துரையாடல்' முதல் கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வரைவுகளின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

# யாழில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளி ஆதவன் படுகொலையா?

## உறவினர்கள் சந்தேகம்; நீதிமன்றில் மனுத்தாக்கல்



யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மர்மமான முறையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முன்னாள் போராளியான மாணிக்கம் ஜெயக்குமாரின் (ஆதவன்) மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது என மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாயைச் சேர்ந்த, இரு பிள்ளைகளின் தந்தையான இவர் கடந்த 2021.09.28 ஆம் திகதி காலை 6 மணியளவில், வழமைபோல் நடைப்பயிற்சிக்குச் செல்வதாகக்கூறி வெளியே சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் வீடுதிரும்ப வில்லை.

பின்னர் 2021.09.30ஆம் திகதி மாலை குறித்த நபர் நவாலிப் பகுதியிலுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும், இவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் அப்போதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவருடைய நண்பர்கள் தெரிவித்திருந்த போதிலும், குடும்பத்தினர் தமது பாதுகாப்புக் கருதி இது தொடர்பாக எந்தக் கருத்தும் வெளியிடவில்லை.

இருப்பினும், இவருடைய வீட்டுக்கும் இவர் சடலமாக மீட்கப்பட்ட பகுதிக்கும் இடையில் நெடும் தூரம் காணப்பட்டதையடுத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனால் இவருடைய உடல் நீதிமன்றக் கட்டளையின்படி உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் தகனம் செய்யப்படாமல் புதைக்கப்பட்டது.

விசாரணைகள் இடம்பெற்று குறித்த வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படத் திகதியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த நபர் மன நிலை பாதிக்கப்பட்டு இருந்தார் எனவும், அதனால் இவர் தனது உயிரை மாய்த்திருக்கலாம் எனவும் பல செய்திகள் பரப்பப்பட்டிருத்ததைத் தற்போது அறிந்த குடும்பத்தினர் அதை முற்றிலும் மறுத்துள்ளனர்.

அவர் நல்ல சுகதேகியாக இருந்தார் என்றும், தவறான முடிவு எடுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை என்றும், அவரது மரணத்தில் சந்தேகம் இருக் கின்றது என்றும் குடும்பத்தினர் தெரிவித்துள்ள னர்.

அதனடிப்படையில், குறித்த மரணத்தில் சந்தேகம் இருக்கின்றது எனவும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதால், அன்றைய தினம் இவ்விண்ணப்பம் தொடர்பான நடவடிக்கைக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

உறவினர்கள் சார்பாக சட்டத்தரணி எம்.திருக்குமரன் மன்றில் விண்ணப்பம் செய்திருந்தார்.

மாணிக்கம் ஜெயக்குமார் (ஆதவன்) 1994ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்ததுடன், அரசியல் துறையின் நிதி தொடர்பான விடயங்களில் பொறுப்பாளராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாரிய வெடிகுண்டுகளை இரும்புக்காக கடத்திச் செல்ல முற்பட்ட அறுவர் கைது!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட பாரிய இரண்டு வெடி குண்டுகளை இரும்புக்காகக் கடத்திச் செல்ல முற் பட்ட 6 பேரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணியில் கைவிடப்பட்ட இரண்டு பாரிய வெடிகுண்டுகள் இருந்துள்ளன.

அங்கு வேலி அமைப்பதற்காக நேற்றுமுன்தினம் சென்ற நபர் ஒருவர் வெடிகுண்டுகளை அடையாளம் கண்டுள்ளார். அதனை நேற்று இரும்புக்கு விற்பதற்காக எடுத்துச் செல்ல முற்பட்டபோது புதுக்குடியிருப்பு, கைவேலி பகுதியைச் சேர்ந்த 6 பேரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சுமார் 400 கிலோகிராம் எடை கொண்ட குறித்த குண்டுகள் இரும்புக் காகக் கடத்தப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதானவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் விடுதலை!

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் நேற்று (புதன்கிழமை) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைத் தலைமன்னார் கடற்படையினர் கடந்த மாதம் 19 ஆம் திகதி கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்திய நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக சட்டத்தரணி எஸ்.டிணோசன் தெரிவிக்கையில் -

மேற்படி 12 இந்திய மீனவர்களும் நேற்று (புதன்கிழமை) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். இவர்களில் சிறுவர் ஒருவரும் அடங்குகின்றார்.

இதன் போது இந்த மீனவர்களுக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு கடற்தொழில் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதன் போது குறித்த மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் ஒரு வருட சாதாரண சிறைத் தண்டனை வழங்கப்பட்டதோடு, குறித்த சிறை தண்டனை 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மீனவர்களில் சிறுவர் ஒருவர் உள்ளமையால் நிபந்தனையின் அடிப்படையில் எச்சரிக்கப்பட்டு, மேற்படி சிறுவன் தனது கல்வியைத் தொடர வேண்டும் என நீதிவான் அறிவுறுத்தியதோடு மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூர் ஆலய பரிபாலகர் பற்றிய கைநூல் வெளியீடு



வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் எழுதிய 'எளிமை மிகு பரிபாலக ஆளுமை' என்ற கைந்நூல்வெளியீடு07.01.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் பரிபாலகர் அமரர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் நற்செயற்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ள இந்த நூலின் வெளியீட்டுக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமை தாங்கவுள்ளார்.

யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய செயலாளர் இ. இரத்தினசிங்கம் வரவேற்புரையையும், நிகழ்வில் நல்லை சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கருத்துரைகளையும், யாழ். மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர் ச. லோகசிங்கம் நன்றியுரையையும் ஆற்றுவர்.

நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் கைந்நூல் இலவசமாக வழங்கப்படும். சுகாதார விதிகளைப் பின்பற்றி அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.


## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கொழும்பு சென்று வரக்கக்கூடிய கனரக வாகன சாரதி தேவை

தொடர்புகளுக்கு -
0770266833
0774449705


## சாதாரண நடைமுறைகளுக்கமைய 10 ஆம் திகதிமுதல் பாடசாலைகள்!

கொழும்பு, ஜன. 06

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய, முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரையில் கல்வி நடவடிக்கைகளை சாதாரண நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனாப் பரவல் அதிகரித்து வந்த நிலையில், பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன.

இதனையடுத்து, சில கட்டுப்பாடுகளுடன் பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# Vocational Study in GERMANY

தொழிற்கல்வி கற்பதற்குச் சிறந்த நாடுகளில் ஒன்றான ஜேர்மனியில் உங்கள் கனவுகளை நனவாக்கிட....

* 3 வருட காலப் பயிற்சிநெறி
* 100ற்கும் அதிகமான பயிற்சிநெறிகள்
* பிரசித்திபெற்ற நிறுவனங்களில் தொழிற்பயிற்சி
* பயிற்சிநெறியின் போதே மாதாந்த வருமானம்
* பயிற்சியின் முடிவில் ஐரோப்பாவில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகைமைகள் -

* 18 - 25 வயதிற்குட்பட்டவர்கள்
* உயர்தரம் - 3C பெறுபேறுகள்
* சா/த- 2 மொழிகள், கணிதம், விஞ்ஞானம் அடங்கலாக 6 பா[illegible]ல் 5C பெறுபேறுகள்



ITS STUDY ABROAD

441, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோயில் அருகாமையில்)

071 777 4666
021 222 8060


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2022இல் வெளியிடப்பெற்றது.